REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

PATHUXAVALAN

மலர் 125
இதழ் 15
01 கார்த்திகை 2001
பக்கங்கள் 8
விலை ரூ. 5

## நற்செய்திப் பணிப் பேராயத்தின் துணைச்செயலாளராக ஆயர் மல்கம் ரஞ்சித்



திருத்தந்தை 2ம் யோவான் பவுல் இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித் அவர்களை நற்செய்திப் பணிப் பேராயத்தின் துணைச் செயலாளராகவும், பாப்பரசரின் மறைபரப்பு சபைகளின் தலைவராகவும் நியமித்துள்ளார். அதே வேளையில் பேராயர் என்னும் பட்டத்தையும் வழங்கியுள்ளார். திருத்தந்தையின் தூதரகம் அக்டோபர் மாதம் 2ஆம் திகதி இத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஆயர் ரஞ்சித் இப் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளமை இலங்கைக்கு கிடைத்த ஒரு பெருமையாகும். இத்தகைய மகத்தான பதவிக்கு இலங்கையர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

இலங்கை ஆயர்களுள் இளையவரான ஆயர் ரஞ்சித் 1947, நவம்பர் 15ஆம் திகதி பிறந்தார். 1975 யூன் 29 அன்று ரோமாபுரியில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பல பங்குத் தளங்களில் பணிபுரிந்த பின் 1983ல் அவர் மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குநராகவும், வின்சென்ற் டி பவுல் சபையின் மறைமாவட்ட ஆன்ம குருவாகவும் நியமிக்கப்பட்டார். இப் பணிகளில் அவரது ஆற்றலும் நிர்வாகத் திறனும் வெளிப்படையாயின. குறிப்பாக தூர்ந்துபோகும் நிலையிலிருந்த திருப்பாலத்துவ சபையை புனரமைத்து உயிர்த் துடிப்புள்ள கத்தோலிக்க சிறுவர் சபையாக அதை அமைத்தார்.

1991ல் அவர் கொழும்பு துணை ஆயராக நியமனம் பெற்றார். 1995ல் திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் இலங்கைக்கு வருகை தந்தபோது அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் கவனிக்கும் பொறுப்பு ஆயர் ரஞ்சித்திடம் ஒப்படைக்கப்பட்டது. இப் பணியை அவர் மிக

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## "நாம் எல்லோரும் சமமாகவே நடத்தப்பட்டோம்"

### ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

"என்னுள் சில மனப்பாங்குகள் ஆழமாக இடம்பெற்றிருப்பதை நோக்கும்போது புனித பிறிஜற் கன்னியர் மடத்தின் பாரம்பரியங்களிலிருந்தும், கல்வி முறையிலிருந்தும் நான் கற்றுக்கொண்டதாக உணர்கின்றேன்"

இவ்வாறு புனித பிறிஜற் கன்னியர் மடத்தின் நூற்றாண்டு பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக சமூகமளித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார். பல முக்கிய பிரமுகர்கள் பிரசன்னமாயிருந்த அவ்விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி "எமது சூழ்நிலையும் பாரம்பரியங்களும் எமக்குக் கற்பித்த அனைவரும் சமமம் என்ற உண்மை எனது வாழ்நாள் முழுவதும் எனக்குத் துணை நின்றிருக்கிறது. பாடசாலை எல்லோரையும் சமப்படுத்தியது. பல்வேறு இன, மதங்களைச் சேர்ந்த நாம் எல்லோரும் சமமாகவே நடத்தப்பட்டோம்" என்று கூறினார். கல்விதுறையில் கொண்டு வரப்படும் திருத்தங்களை குறிப்பிட்டு தனியார் பாடசாலைகள் இத் திருத்தங்களுக்கு முழு ஆதரவளித்திருப்பதாக கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது தாயாராகிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் புனித பிறிஜற் கன்னியர் மடத்தின் பிரசித்திபெற்ற பழைய மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## எல்லாச் சிங்கள மக்களும் பேரினவாதிகள் அல்லர்

### அருள்திரு அலெக்சாண்டர்

சமாதானத்திற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை செடேக் நிறுவன ஆதரவில் கியூடெக் நிறுவனத்தால் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் அருள்திரு அலெக்சாண்டரும், அருட்சகோதரி பற்றிமா நாயகியும் இணைந்து நடத்தினர்.

26.10.2001 காலை அகவொளியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு அருள்திரு சி.ஜி. ஜெயக்குமார் அவர்களின் உரையுடன் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இக் கருத்தரங்கு குருநகர், ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி, மெலிஞ்சிமுனை, யாழ். மறைக்கல்வி நடுநிலையம், பருத்தித்துறை, இளவாலை கென்றியரசர் கல்லூரி ஆகிய இடங்களிலும் விசேடவிதமாக குருக்கள், அருட்சகோதரிகளுக்கும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பங்குகொண்டோர் பல கேள்விகளையும் பல கருத்துக்களையும் முன்வைத்தனர். அவையாவன:

* ஒரு இனத்தின் உணர்வை மற்ற இனம் மதிக்க வேண்டும்.
* வடக்கிலும் கிழக்கிலும் பொருளாதாரத் தடை, விமானக் குண்டுவீச்சு நடத்திக்கொண்டு சமாதானம் பேசுவதில் அர்த்தமில்லை.
* அன்றாடம் தொழிலுக்குச் செல்லமுடியாத நாம் சமாதானம் பற்றி என்ன பேசுவது?
* சமாதானம் என்பது சிறுபான்மை மக்களின் உரிமையை மதித்து ஏற்பதாகும்.
*இன்றைய சூழ்நிலையில் 2ம் தரப் பிரஜையாக தமிழரைக் கருதும்வேளையில் எப்படி சமாதானம்?
* முதலில் தனிமனிதனா

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## ஒழுங்கான பாரபட்சமற்ற தேர்தல்தான் ஆரோக்கியமான நன்மதிப்பை ஏற்படுத்தும்

### இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

இவ்வாறு இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை வரப்போகும் தேர்தல் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அவ் அறிக்கையின் விபரம் வருமாறு:

இலங்கையின் கூட்டமன்றத்துக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 2001 டிசம்பர் 5ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறப்போகின்றது. எமது நாட்டினது வரலாற்றின் நெருக்கடியான இக்கட்டத்தில் கத்தோலிக்க ஆயர் பேரவையானது பொதுத்தேர்தல் பற்றிய சில முக்கிய விடங்களை மக்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறது.

**மக்களின் இறைமை**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் யாப்பில் பொறிக்கப்பட்டுள்ள மக்களின் இறைமை வாக்களிப்பின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. இன்று நடைமுறையிலுள்ள "சுதந்திரமான நியாயமான் தேர்தல்கள்" மக்கள் இறைமையைக் கேலிக்கூத்தாக்குகின்றன. எவ்வித தடையோ இடையூறோ இன்றி தனது வாக்குரிமையைப் பிரயோகிக்கும் உரிமை ஓர் அடிப்படை மனித உரிமையாகும். ஓர் அரசசைத் தெரிவதற்காகவோ, அரசை மாற்றுவதற்காகவோ மக்கள் தமது விருப்பத்தை வாக்குகளின் மூலம் வெளிப்படுத்துவதே தேர்தல் எனக் கணிக்கப்படுகின்றது.

**வன்முறையற்ற சூழல்**

அண்மைக் காலத்தில் நடந்த சில தேர்தல்கள் வன்முறைகளாலும் முறையற்ற செயல்களாலும் சீர்குலைக்கப்பட்டன. தாம் விரும்பும் வேட்பாளருக்கு சுதந்திரமாக வாக்களிக்கக்கூடியதாக, வன்முறையற்ற ஒரு சூழலில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சனநாயக முறையில் நம்பிக்கையுள்ள எல்லோரும் விரும்புகின்றனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக கடந்த சில தசாப்தங்களில் நடந்த தேர்தல்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## உண்மையாளன் ஒருவன் சிந்திய இரத்தம் பயனற்றுப் போகாது

படுகொலை செய்யப்பட்ட மயில்வாகனம் நிமலராஜனின் 1ம் வருட நினைவாக 17.10.2001 அன்று மாலை 3மணிக்கு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கொழும்பிலிருந்தும் பத்திரிகையாளர் இருவர் இந் நிகழ்வில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

19.10.2001 அன்று காலை 10மணிக்கு திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் அருள்தந்தையர்கள் ஜெயசேகரம், ஜெயக்குமார், கிறிஸ்தோபர், செலஸ்ரின், அன்புராசா உட்பட நிமலராஜனின் உறவினர்களும், நண்பர்களும் பங்கேற்றனர். ஜெயசேகரம் அடிகள் திருப்பலியைத் தலைமையேற்று நிறைவேற்றினார். மறையுரையை அன்புராசா அடிகள் ஆற்றினார். "இச் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கி கதறிக்கொண்டிருக்கிறது (தொ.நூ. 4:10) உண்மையாளன் ஒருவன் சிந்திய இரத்தம் பயனற்றுப் போகாது. நிமலராஜனைப் பலருக்கு சிறந்தொரு செய்தியாளனாகத் தெரியும். ஆனால், இச் செய்தியாளனுக்குள்ளே இருந்த தியாகம் நிறைந்த தொண்டும், பெருமை பாராட்டாத உள்ளமும், தன்னலம் கருதாத சேவையும், இரக்கம் மிகுந்த செயற்பாடுகளும், சமூகப் பண்பும், ஆழ்ந்த அர்ப்பணிப்பும், மனிதாபிமானமும் உண்மைக்குச் சான்று பகர வைத்தன" என்றார்.

## அறிவில் சிறந்த மக்கள் பிரதிநிதிகள் தெரிவாக வேண்டும்

### செடேக் தேசிய உயிர்ப்பூட்டல் இணைப்பாளர் சிசில் பெரேரா

முன்னைய காலங்களில் 30 வருடங்களுக்கு முன்பாக பாடசாலை மாணவர்களை பாராளுமன்றம் பார்ப்பதற்காக அழைத்துச் செல்லுவார்கள். அக்காலத்தில் நான் சென்று தரிசித்த நினைவுகளை மீட்டுப்பார்க்கும் போது அறிவும், அனுபவமும், ஆற்றலும் நிறைந்த மக்கள் பிரதிநிதிகள் மிகக் கௌரவமாக கருத்துக்கள் பரிமாறுவதை பார்த்துப் பரவசம் அடைந்தேன். இன்றைய பாராளுமன்ற அமர்வுகள் எமது நாட்டில் மட்டும் அல்ல எங்கும் ஒழுக்க வரம்புகள் மீறிய வார்த்தைகளும் அருவருக்கத் தக்க செயல்களும் மனித நாகரிகத்தை இழக்கச்செய்து விடுகிறது.

மக்கள் பிரதிநிதிகள் என பிரதிநிதிப்படுத்துபவர்கள் என எம் நாட்டின் முன்மாதிரியானவர்கள் ஆக செயல்படவேண்டியவர்களே இவர்கள் தவறு இழைத்தால் குடிமக்கள் எப்படி அவர்களை முன்மாதிரியாக கொண்டு வாழலாம். ஆகவே தலைமைத்துவம் ஏற்பதில் உள்ள ஆர்வம் கல்வி அறிவிலும், ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் சிறந்தோங்குவதிலேதான் அந்த நாட்டின் வளர்ச்சியும் சிறந்த ஆட்சியும் மக்களை நல்வழி காட்ட உதவும் அதற்கு கட்டாயக் கல்வி மட்டும் அல்ல அறிவியல், ஆன்மீக ஒழுக்கக்கல்வி ஊட்டி வளர்க்கும் விழ்ப்புணர்வு சகலருக்கும் தேவையென செடேக் நிறுவன தேசிய உயிர்ப்பூட்டல் குழுவின் இணைப்பாளர் திரு சிசில் பெரேரா யாழ் வருகையின் போது ஊர்காவற்துறை அன்ரனிஸ் கல்லூரி மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கட்டாயக் கல்வி தினத்தில் விழிப்புணர்வு ஊட்ட வருகை தந்த செடேக்நிறுவன கொழும்பு பிரதிநிதிகளை வரவேற்று உரையாற்றிய சென். அன்ரனிஸ் அதிபர் யேசுதாசன் அடிகள் எமது பிரதேசத்தில் பல்வேறுபட்ட நெருக்கீடுகள் மத்தியில் கல்வியை தொடர பல தடைகளை தாண்ட வேண்டிய நிலையில் மாணவர்கள் வாழ்கிறார்கள்.

கட்டாயக் கல்வியின் நோக்கம் பெற்றோரின் அக்கறையில் மட்டுமல்ல ஒவ்வொரு மாணவர்களின் ஆர்வத்திலுமே தங்கி உள்ளது ஒரு மாணவரின் முன்மாதிரியான வாழ்வு அவரது குடும்பத்தில் ஏற்றும் அறிவொளியின் கலங்கரை விளக்காகி வளர்க்கப்படவேண்டும். இத்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து
### மீண்டுமொரு தேர்தல்

டிசம்பர் 5ல் நடக்கப்போகும் பொதுத்தேர்தலுக்கு வேட்புமனுக்கள் தாக்கலாகி, கட்சிகள் மும்முரமாகப் பிரசாரத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளன. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோல்வியுற்று, அரசு பாராளுமன்றத்தைக் கலைக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானதால் இடைநடுவில் நிகழ்த்தப்படும் இத் தேர்தலில் கட்சிக்கு கட்சி தாவலும், கூட்டுச்சேர்வதும், பழைய எதிரிகள் நண்பர்களாவதும், நண்பர்கள் எதிரிகளாவதும் வழக்கத்தைவிட அதிகமாகவே நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும் எத்தனையோ குளறுபடிகள் நடக்குமென்பதும் எதிர்பார்க்கப்படுவதுதான்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை இத் தேர்தலும் அண்மைக்காலத்தில் நடந்த ஏனைய தேர்தல்களைப் போல் போர்க்காலப் பின்னணியிலேயே நடக்கின்றது. நீண்டகாலப் போரினாலும் அதன் தாக்கங்களாலும் வேதனையும், விரக்தியும் அடைந்துள்ள எமது மக்கள் தேர்தலில் அக்கறை காட்டும் மனநிலையில் இல்லை. தேர்தலில் யார் வெல்லுவார்கள் என்பதைவிட தங்களுக்கு என்ன நடக்கப்போகிறது என்பதைப் பற்றித்தான் அவர்களது ஏக்கம். எனவேதான் மாவட்டத் தேர்தல்களைவிட அகில இலங்கை ரீதியில் ஏற்படப்போகும் முடிவிலேயே அவர்களது சிந்தனை செல்கிறது. அவர்களது ஒரே ஏக்கம் ஒரு சமாதான நிலை ஏற்பட வாய்ப்புண்டா என்பதுதான்.

யாழ். மாவட்டத்தில் 9 கட்சிகள் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளன. இவற்றுள் பல திடமான கொள்கைகளே இல்லாதவை. இன்றைய பின்னணியில் இனப்பிரச்சினை விவகாரத்தையும் மனித உரிமைகளையும் முன்வைத்து பெரும்பாலும் இக் கட்சிகள் பிரசாரம் செய்யக்கூடும். அதனால் அவர்களால் எதுவும் ஆகப்போகிறது என்று அர்த்தமல்ல, தாம் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? இல்லையா? என்பது பற்றிக் கவலைகொள்ளாது வாக்குறுதிகளை வாரி இறைக்கும் அரசியல்வாதிகள் எமக்குப் புதியவர்களல்ல. இத்தகைய ஆசை வார்த்தைகளில் எமது மக்கள் எத்தனையோ முறை ஏமாந்துபோயிருக்கின்றனர். ஆகவே இனி யாரை நம்புவது என்ற குழப்பம் ஏற்படுவது இயற்கை. உறுதியான கொள்கையும், மக்கள் நலனில் அக்கறையும் கொண்ட எவரையும் காணாதவிடத்து வாக்களிக்காமலே விட்டுவிடுகின்ற நிலைமையையும், நாம் சென்ற தேர்தலின்போது கண்டோம். ஆனால், இந்நிலை ஆரோக்கியமானதல்ல, இதுவே தேர்தலில் பல மோசடிகளும் ஆள்மாறாட்டங்களும் நடைபெற வழிவகுக்கக்கூடும். ஆகவே, மக்கள் தமது விலைமதிப்பற்ற வாக்குகளை பிரயோகிக்க வேண்டும். அதுவும் நன்கு சிந்தித்து, இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் நலனை நாடுபவர்கள் யார் எனத் தெளிந்து மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

*

# யாழ். மறைமாவட்டத்தில் நடைபெற்ற இறைதியான வழிபாடுகளின் தொகுப்பு

**யாழ். புனித மரியன்னை பேராலயத்தில்...**

செம்ரெம்பர் 29ம் திகதி மாலை 4.00 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தில் இறைஇல்ல குணமாக்கல் வழிபாடு ஆரம்பமானது. அன்றைய தினம் முதலில் சகோதரர் ஜோர்ஜ் அவர்கள் வழிபாட்டினை முன்னெடுத்துச் சென்றார். தான் பிரபல திரைப்பட நடிகன் என்ற நிலையிலிருந்து எவ்வாறு கிறிஸ்து இயேசுவின் ஊழியன் என்ற நிலைக்கு வந்தார் என்பதை சாடசியாக எடுத்துக்கூறி 3ம் நூற்றாண்டில் கத்தோலிக்கரால் கொடுக்கப்பட்ட வேதாகமத்தின் முக்கியத்துவத்தையும், கரங்களை உயர்த்தி செபிக்கவேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்கூறி இறைஅனுபவத்திற்குள் மக்களை இட்டுச் சென்றார்.

பின்பு அருட்தந்தை அகஸ்ரின் முண்டகாட் அவர்கள் ஆயருடன் இணைந்து வழிபாட்டு இடத்திற்கு வருகை தந்தார். ஆயர் அவர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்த இறை ஊழியர்கள் இருவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்று உரையாற்றினார். பின்பு அருட்தந்தை அகஸ்ரின் முண்டகாட் அவர்கள் இறைவார்த்தையை எடுத்துரைத்து பல்வேறு இடங்களிலும் குணமடைந்தவர்களின் சாட்சியங்களை எடுத்துக்கூறி மக்களின் உள்ளங்களை இறை விசுவாசத்திற்குட்படுத்தினார். பின்பு தேவ நற்கருணை எழுந்தேற்றம் செய்துவைக்கப்பட்டது. மக்கள் அனைவரும் கரங்களை உயர்த்தி செபிக்க தந்தையவர்களும், சகோ. ஜோர்ஜ் மற்றும் அருட்தந்தையர்கள் அனைவரும் இணைந்து செபித்தனர். இறுதியில் பலர் அற்பதமான முறையில் குணமடைந்தனர். குறிப்பாக சிலருக்கு உண்டாயிருந்த கட்டியிலிருந்து விடுதலை பெற்றனர். அதில் ஒரு சிறுமியை குறிப்பாக தந்தை கூறினார். பலருக்கு கண் பார்வை கிடைத்தது. காதுகேட்காதவர்கள் குணமடைந்தனர். மூட்டுவலி, இடுப்புவலியால் பாதிக்கப்பட்டோர் குணமடைந்தனர். குழந்தை பாக்கியம் இல்லாத சிலருக்கு அப்பாக்கியம் கிடைத்திருப்பதாக கூறினார். 3 அருட்தந்தையர்களுக்கும் 2 அருட்சகோதரிகளுக்கும் இறைவாக்கு பணிக்கான விசேட அருள் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் கூறினார். இவ்வாறாக நூற்றுக்கணக்கானோர் அந்நாளில் பல நோய்களிலிருந்து விடுதலை பெற்றனர்.

ஆண்டவரின் அருள் பெருக்கெடுத்து பாய்ந்த அந்த முதல் நாளில் அங்கு வந்த எல்லாமக்களும் மன அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் சென்றதை அவதானிக்க முடிந்தது.

அருளானந்தம் சாந்தி

**குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்...**

2ம் நாள் வழிபாடு ஆலய முன்றலில் புரட்டாதித் திங்கள் 30ம் நாள் மாலை 4.00மணிக்கு ஆரம்பமாகியது.

போரின் கொடுமைகளாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் பல்வேறு அடக்கு முறைகளாலும் எம் மண்ணில் மனிதம் மாண்டது மட்டுமன்றி தன் நலமே பெரிதென வாழும் சுயநலப் போக்கினாலும் ஆடம்பர கேளிக்கை வாழ்வினாலும் புனிதத் தன்மை போய் பாவம் மலிந்து நோயின் பிடியில் சிக்கித் திசை தெரியாத கப்பல் போல் எம் மண்ணின் மக்கள் தள்ளாடினர். ஆம் பாவம் பெருகிய இடத்தில் இறைவனின் அருள் பெருக்கெடுத்து ஓடியது.

இந்நிலையில் எம் மண்ணிற்கு இறைவனின் கடைக்கண் பார்வை கிடைத்தது. அருட்தந்தை அகஸ்தீன் முண்டகாட் சகோதரர் ஜோர்ஜ் வர்கீஸ் தரகன் ஆகியோர் நடாத்திய தியான குணமாக்கல் வழிபாட்டில் கத்தோலிக்கர் மட்டுமன்றி பிற சமயத்தவர்களும் பெருமளவில் கலந்துகொண்டு குணமடைந்து சென்றனர்.

''அழுகையோடும் கண்ணீரோடும் பெரும் குரலெடுத்து செபியுங்கள் அப்பொழுது ஆண்டவர் உங்கள் செபத்தை கேட்டருள்வார்'' இறைவனை துதியுங்கள் என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள்.

என்ற திரு வசனங்கள் மக்கள் மனதில் ஆழமாக தைத்தது. அவர்கள் பெரும் சத்தத்தோடு இறைவனை துதித்து புகழ்ந்ததையும் பெரும் கதறலோடு தம் பாவங்களை மன்னித்து நோய்களை நீக்க வேண்டும் என்று உருகி கண்ணீர் சிந்தியதும் மனதை நெகிழச் செய்யக் கூடியதாக அமைந்தது.


*''விண்ணப்பத்தை கேட்டருளும் விண்ணில் வாழும் யேசு தேவா வா தேவா வா தேவா என் மனக் கோவிலில் வா தேவா''* என்று மனக் கதறலாக ஒலித்தது. இறைவனின் செவிக்கும் எட்டி இறைவன் இறங்கி வந்து பாவிகளையும் நோயாளிகளையும் தொட்டார். எண்ணிலடங்கா பாவிகள் மனம் திருந்தினார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் அன்றைய தினத்திலேயே உடல் –உள நோய்களில் இருந்து சுகம் அடைந்து இறுதியில் நற்கருணை ஆசீர் பெற்று மன நிறைவுடன் வீடு திரும்பியதை காணக்கூடியதாக அமைந்தது.

''ஆற்றலாழும் அல்ல சக்தியாலும் அல்ல
ஆண்டவரின் ஆவியாலே ஆகுமே ஆகுமே''

பூவிலிங்கம் ஜெயவதனி

*தொடரும்...*

# நான் கதவண்டை நின்று தட்டுகின்றேன்
## உலகெங்கும் சகவையின் ஞாபகமாக – 27.10.1793



**பிறப்பின் மகிழ்வு !** ~ பிரஞ்சுப் புரட்சிக் காலத்திலே, போர்க்கோலம் பூண்ட போர்டோ நகரத்தில் 1793 ஐப்பசி 27ல் பூத்தது ஒரு மலர் வீரமுடன் ஞானம் கொண்ட பியன்வெனு அன்னையின் பஞ்சணையை விட்டு, மண்ணில் பாதம் பதித்தார். கத்தோலிக்க சமயத்தை சுதந்திரமாகப் பின்பற்ற முடியாத துன்பக் கனல் சொரியும் காலத்தில் ''நல்வரவு'' என்ற நாமத்துடன் இறைபிள்ளையானாார். 1816ல் இறைகுரலிற்கு ஆம்எனப்பதில் அளித்து, குருமடம் சேர்ந்து, 1819ல் இறைவனின் உன்னத குருவானார். இவரை ஆட்கொண்ட ஒரே ஒரு செல்வம்! ''திருமுழுக்கு பக்தியும், திரித்துவ அன்பும், இறைவன் மாத்திரமே'' என்ற தாரக மந்திரமுமேயாகும்.

**கனவு நனவாகிறது** ~ தந்தையாகிய இறைவன் ''கிறிஸ்து யேசுவில் மனுக்குலம் முழுவதையும் ஒன்றுசேர்க்க வேண்டும்'' என கனவு கண்டார். எமது நல்ல பிதாவும் இதே கனவைக் கண்டார்.

**இறைவன் மாத்திரமே** ~ இதயக் கதவை இறைவன் தட்டுவதை உணர்ந்த நல்ல பிதா, தனி வரம் பெற்றவராக, அவர் ஆன்மா இறைவனை மாத்திரமே ஆசித்து, நேசித்து, தேடியதால் திரித்துவத்தின் சாந்த வடிவமாகிய திருக்குடும்பத்தின் மகிமையை பாரெல்லாம் பரப்ப 3 சகோதரிகளுடன் எம் சபையை 1820.10.28ல் ஆரம்பித்தார்.

**இதய நாதம்** ~ உயர்ந்த அழகிய மரம் ஒன்றில் பலவிதமான பறவைகள் அமர்ந்து ஒரே குரலில் பாடிய பாடல் ''இறைவனுக்கு மாத்திரமே மகிமை'' அதிசயம் ஆனால் உண்மை. அது எப்படி முடியும். வந்து பாருங்கள். இதுவே திருக்குடும்ப சபையின் இதய நாதம்.

**மறுக்கமுடியாத உண்மை** ~ 3 பேருடன் ஆரம்பித்த சபை இன்று 24000 சகோதரிகளைக் கொண்டு, 24 நாடுகளில் ஒரே குரலில் ''இறைவனுக்கு மாத்திரமே மகிமை'' என்று பண் இசைக்கின்றனர். அது மட்டுமா? இறைமகன் இயேசு அற்புதமான காட்சியை 1822 மாசி 3ல் வழங்கி எமது சபையை ஆசீர்வதித்ததை எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

**அழகிய மரம் கிளை விடுகின்றது** ~ கிளைகளாகப் பரந்து, விரிந்து மணம் பரப்புகின்றது. வேர் ஒன்றே. மரம் ஒன்றே. ஆனால் அதன் கிளைகளோ அபூர்வமானவை. எப்படி என்று கேட்கிறீர்களா?

**இன்பத்தின் இருப்பிடங்கள்** ~ கிளை ஒன்று:- உலகின் தேவைகளுக்காக ஓயாது நன்றியும், ஆராதனையும், புகழும் பாடுகின்ற இறைவனின் குமாரத்திகளே இவர்கள். எம் மண்ணில் நீர்கொழும்பு நாகொடையில் இறைவனோடு மாத்திரமே இன்புற்று வாழ்கின்ற ''தியான யோக சகோதரிகள்''.

**பாசத்தின் உறைவிடங்கள்** ~ கிளைஇரண்டு:- ''எம் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற வீர முழக்கத்துடன் தீர்க்கும் கல்விப் பணி, அனாதைச் சிறார்களை அரவணைத்தல், உளவளர்ச்சி அற்றோருடன் உடன் இருத்தல், வழிகாட்டல், பங்குப் பணி இன்னும் காலத்தின் தேவைக்கேற்ப மக்களோடு மக்களாக இணைந்து அரும் பணி ஆற்றுகின்ற ''அப்போஷ்தலிக்க சகோதரிகள்''

**புளிக்காரம்** ~ கிளை மூன்று:- திருமணம் முடிக்காது, ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு என்னும் வார்த்தைப் பாடுகளை எடுத்து தம் குடும்பத்துடன் இருந்து இலைமறைகாய் போன்று இறையரசிற்காக உலகினில் ''திருமட சார்பற்ற சகோதரிகள்''

**முன்னேறிச் செல்லுங்கள்** ~ கிளை நான்கு:- தமது குருத்துவ அர்ப்பணத்தை ஆர்வமுடன் வாழ்ந்து, தாமும் இறைவனை நோக்கி முன்னேறிச் செல்வதுடன், அனைத்து மக்களையும், அவர்பால் ஈர்க்கின்ற அன்புத் தந்தையாகிய ''துணை அங்கத்தினர் குருக்கள்'' எம் குடும்பத்தில் இணைந்து இறைவனுக்கு மாத்திரமே மகிமை சேர்ப்பது குறிப்பிடத்தக்கது.

— அழைத்தல் ஊக்குவிப்பாளர் —
அருள்சகோதரி அருள்

**குட்டித் திருச்சபை** ~ கிளை ஐந்து:- குடும்பமாக இணைந்து திருக்குடும்பத்தின் விழுமியங்களைக் கடைப்பிடித்து இல்லத்திலும், சமூகத்திலும், நாட்டிலும் மனித மாண்புடன் வாழும் ''பொது நிலையினர்களாகிய துணை அங்கத்தவர்கள்''

**வந்துபாருங்கள்** ~ எந்நிலையில் நீங்கள் இருந்தாலும் இறைவனை நோக்கி முன்னேறிச் சென்று, மனித குலம் முழுவதையும் கிறிஸ்துவில் ஒன்றிணைக்கத் துடித்த எமது நல்ல பிதாவின் கனவை நனவாக்க, இளம் உள்ளங்களே.... பெற்றோரே...., சிறுவர்களே... வந்து பாருங்கள்? மனுவுருவெடுத்து சாதாரண குடும்பத்தைத் திருக்குடும்பமாக்கி, அப் பெயருடன் ஓர் உயரிய சபை மலர தனி வரம் அளித்த இயேசு உங்கள் இதயக் கதவைத் தட்டுகின்றார்.

**ஓசை கேட்கிறதா?** ~ அவருடன் மகிழ்ந்திருக்க உங்கள் இதயக் கதவைத் திறப்பீர்களா? உங்களை அன்படன் அழைத்து ஆன்ம விருந்தளிக்க இதோ.... நாம் தயார்.

*''இறைவனுக்கு மாத்திரமே மகிமை''*

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-*

- திருக்குடும்ப மாகாண இல்லம், 121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
- திருக்குடும்ப கன்னியர் மடம், 33 முகாந்திரம் லேன், தெகிவளை, கொழும்பு.
- திருக்குடும்ப கன்னியர்மடம், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீரமாமுனிவர்

**தேம்பாவணி எனும் இலக்கிய தேன் காவியத்தை படைத்த இத்தாலி நாட்டுக் கவிஞர் ஜோசப் பெஸ்கி - வீரமாமுனிவரின் பிறந்த தினம் நவம்பர் 8ஆம் திகதி ஆகும். அதனையொட்டி இளவாலையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு M.D. சூசைநாதரின் இக் கட்டுரை பிரசுரமாகிறது. (ஆர்)**

**M.D. சூசைநாதர்**

மேதினி புகழும் செந்தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் அருந்தொண்டுபுரிந்த, கிறிஸ்தவப் பெரியார்களுள் தலைசிறந்தவர் வீரமாமுனிவர் ஆவார். இவர் இனிய தமிழன்னைக்கு அணிகலன்களாக விளங்கும் ஐம்பெரும் காப்பியங்களோடு சரிநிகர் சமானமாக என்றும் விளங்கும் *தேம்பாவணி* எனும் சிறந்த காப்பியத்தை யாத்துத் தந்து மங்காப் புகழ் பெற்றவர். இவரது இயற்பெயர் கான்ஸ்டான்சியுஸ் ஜோசப் பெஸ்கி (Contantius Joseph Beschi) என்பதாகும். இவர் வேர்ஜில் எனும் பெரும் புகழ்வாய்ந்த இலத்தீன் கவிஞர் பிறந்த இத்தாலி நாட்டின் வெனிஸ் மாகாணத்தில், மாந்துவா மாவட்டத்தில், காஸ்திக்கிலியோன் என்னும் சிற்றூரில் 1680ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் எட்டாம் நாள் பிறந்தார். இவர் தந்தை பெயர் கொண்டல் போ பெஸ்கி. இவரது தாயார் பெயர் எலிசபெத்.

கான்ஸ்டான்சியுஸ் ஜோசப் பெஸ்கி இளமையில் தம் சிற்றூரில் அமைந்துள்ள பள்ளியிலும் பின் ரோமாபுரியிலும் கல்வி கற்று பேரறிஞரானார். இளமையிலிருந்தே பெஸ்கியவர்கள் மிகவும் தெய்வ பக்தி உடையவராக விளங்கினார். யேசுவின் பால் மிகவும் அன்பு கொண்ட இவர் தனது 18வது வயதில் 1698ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28ம் நாள் உலகப் புகழ்பெற்ற யேசு சபையிற் சேர்ந்தார். அச் சபையின் பதினோராண்டுக் கல்விப் பயிற்சியின் காலத்தில் இத்தாலியம், பிரெஞ்சு, போர்த்துக்கீசு, கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் ஆகிய மொழிகளில் நன்கு பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றார். பின் குருப் பணிக்குரிய கல்வியையும் முடித்துக்கொண்ட பெஸ்கி கி.பி. 1709ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

அந் நாட்களில் இந்தியாவின் பற்பல இடங்களில் யேசு சபைக் குருக்கள் திருமறைப் பணிகள் ஆற்றிவந்தனர். அவற்றுள் மதுரை மிஷன் என்பது பரிசுத்த தந்தையால் மறைப்பணிக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் மாவட்டமாகும். மதுரை மிஷன் என்று அக்காலத்தில் வழங்கப்பட்ட மாவட்டம் இப்போது தமிழ் நாட்டைக் குறிக்கும். ஆகவே யேசு சபைக் குருக்களான புனித சவேரியார் (கி.பி. 1542 ஆண்டு) தெநொபிலிஜான் டி பிரிட்டோ (அருளானந்தர் எனும் தமிழ் பெயர் பூண்ட போர்த்துகீசிய அடிகள்) ஆகியோரைத் தொடர்ந்து பெஸ்கி அடிகளாரும் தமிழ்நாட்டில் இறைபணியாற்ற அவாக் கொண்டார். இவர் தமது மட அதிபரின் ஆசியோடு தம் தாய்நாடாகிய இத்தாலியை விட்டு 1710ம் ஆண்டு லிஸ்பன் துறைமுகத்திலிருந்து கப்பலேறி இந்தியாவுக்குப் புறப்பட்டார். தமிழ்நாட்டில் பணிபுரியும் நோக்கோடு தன்னந்தனியாக புறப்பட்ட பெஸ்கி அடிகள் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கோவாத் துறைமுகத்தில் 1711ம் ஆண்டு வந்து இறங்கினார். கோவாவில் சிறிது தமிழ் பயின்ற பின் மலையாளக் கரையிலுள்ள அம்பலக்காடு எனும் ஊருக்கு அனுப்பப்பட்டார். அங்குள்ள யேசு சபைக் குருமடத்தில் தான் அவாக்கொண்டு வந்த பணி இனிதுற அமைய முப்பது நாள் தியானத்தில் அமர்ந்து இறைவனைவேண்டினார். 1711ம் ஆண்டு மே திங்கள் 8ம் நாள் மதுரை மிஷனுக்குச் சென்றார். அங்கு பணியாற்றிய குருக்கள் அனைவரும் தமிழ் பழக்கவழக்கங்களையே அனுசரித்தனர். அது கண்ட பெஸ்கி அடிகள் தாமும் ஊனுணவு தவிர்த்து காவியுடை அணிந்து தமிழ் நாட்டுத் துறவிபோல் வாழ்ந்து சமயப் போதகராகப் பணியாற்றினார்.

பெஸ்கி அடிகளார் தமிழ் நாட்டிற்கு வந்த காலை தமிழகம் அல்லற்பட்டுக் கொண்டிருந்தது. முடியுடை வேந்தர் ஆண்ட நாட்டில் நாயக்கரும், மராட்டியரும், மகமதியரும், பாளையக்காரரும் மற்றும் சிற்றரசர்களும் ஆட்சி செலுத்தினர். இவர்களுக்கிடையே படையெழுச்சிகளும், அரசியற் புரட்சிகளும், குழப்பங்களும் அதனால் பஞ்சமும், பிணியும் நாட்டைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருந்தன. தமது மறைத்தூதுப் பணியை ஆற்றத் தொடங்கினார். இவரது பணியை காலவரிசைப்படி அறிவது மிகவும் சுவையானது.

1713ம் ஆண்டு கயத்தாற்றுப் பாளையத்தைச் சேர்ந்த குருக்கள் பட்டியைத் தம் இருப்பிடமாகக் கொண்டு சமயப் பணியாற்றிவந்தார். அப்போது செல்வந்தருட் சிலரும், கயத்தாற்றுப் பாளையத் தலைவரின் உறவினரில் ஒருவரும் இந்துமத பூசாரி ஒருவரும் திருமுழுக்குப் பெற்றனர். அதனால் கயத்தாற்றுப் பாளையத்தார் கோபாவேசங்கொண்டு எழுந்தரெனினும் அன்றைய தலைவர்களின் செல்வாக்கையும் நன்மதிப்பையும் பெற்ற பெஸ்கி அடிகளார் மட்டில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஓர்நாள் இடத்திற்கேற்றால் போல் வேடம் போடும் வேடதாரியொருவன் குருக்கள் பட்டியில் சமீபமாகவுள்ள வடக்கன் குளத்தில் வந்து கிறிஸ்தவன் போல் நடித்து அவ் ஊர் மக்களின் ஆதரவைப் பெற்றான். தனது வேடம் வெற்றியளித்ததை உணர்ந்த அவ் வஞ்சகன் அவ் ஊரை அடுத்துள்ள வேறு சிற்றூர்களுக்குச் சென்று மக்களை ஏமாற்றி சீவனம் நடத்திவந்தான். அவனது உளத்தூய்மையற்ற செயலை அறிந்துகொண்ட அவ் ஊர் மக்கள் அவனைத் துன்புறுத்தினார்கள். அந்த வேடதாரியோ குருக்கள் பட்டி சென்று தான் எதுவித குற்றமும் அற்ற அப்பாவிபோல் நடித்து தனக்கு நேர்ந்தவற்றை பெஸ்கி அடிகளிடம் கூறினான். [illegible] தீர விசாரித்தறிந்த அடிகளார் அவ் வஞ்சகனுக்கு நற்புத்தி புகட்டி அவனை வழியனுப்பினார். எனினும், தூய நெஞ்சம் அற்ற அக் கயவன் அடிகள்பால் மனவெறுப்புக் கொண்டவனாய் மதுரை நாயக்க மன்னன் படைத் தலைவனிடம் யாசக வேடம் தரித்துச் சென்று முனிவர்பால் வெறுப்புணர்ச்சியை உண்டாக்கும் வண்ணம் உரையாடினான். இவனது வெறுப்புணர்ச்சியூட்டும் உரையாடலால் முனிவர்பால் வெறுப்புக் கொண்ட படைத் தலைவன் முனிவரையும் அவரோடு சமயபோதகத்திலீடுபட்ட போதகர்கள் இருவரையும் சிறைப்பிடித்ததுமல்லாமல் முனிவரது செல்வத்தையும் கவர்ந்து வருமாறு செய்தான். சிறைப் பிடிக்கப்பட்ட வீரமாமுனிவரும் போதகர்கள் இருவரும் படைத் தலைவன் முன் நிறுத்தப்பட்டு கொலைத் தீர்ப்புப் பெற்றனர். இத் தீர்ப்பை யேசுவுக்காக உயிர் துறக்க தமக்குக் கிடைத்த பெரும்பேறு என முனிவரவர்கள் மகிழ்ச்சியுற்றார். ஆயினும் முனிவருக்கு வந்த துன்பத்தை தமக்கு வந்ததாக எண்ணி இரு பெண்களின் உதவியால் முனிவரும் அவரோடு கொலைத் தீர்ப்புப் பெற்ற இரு போதகர்களும் விடுதலையாக்கப்பட்டனர். கிறிஸ்துவுக்காக உயிர் துறத்தலே பெரும் பேறென நினைத்து மகிழ்ந்த முனிவர் தமது விடுதலையையிட்டு மகிழ்ச்சியுற்றாரல்லர். எனினும் இதுவும் இறைவனின் சித்தமென நினைந்து மீண்டும் பணிபுரிய குருக்கள்பட்டியை நோக்கிப் புறப்பட்டார். குருக்கள்பட்டியில் தமக்கு நேர்ந்த துன்பத்தையிட்டு மிகவும் உளம் நொந்ததனால் முனிவரின் மறைத் தொண்டு சிறிதுகாலம் தடைப்பட்டது. இக்காலத்தை முனிவரவர்கள் நல்லாசான்களை நாடி தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையே கற்றார். இவரது நல்லாசான்களுள் சுப்ரதீப கவிராயர் என்பவர் சிறப்புமிக்கவர். பண்டுதோன்றிய இலக்கண காப்பிய காவியங்கள் அனைத்தையும் துருவித் துருவித் ஆய்ந்து பயின்றார். கான்ஸ்டான்சியுஸ் எனும் தமது பெயர் வடமொழியில் தைரியம் தருதலால் தனது பெயரை தைரியநாதசுவாமி என மாற்றினார். சுவாமிகள் காமநாயக்கன்பட்டி, குருக்கள்பட்டி, எயிலூர், புதுச்சேரி, வருகர்பட்டி, தூத்துக்குடி, மணப்பாடு, அம்பலக்காடு முதலிய இடங்களில் சமய போதகப் பணி ஆற்றியதாக அறியக் கிடக்கின்றது. அடிகளார் தேவ தாயின் பேரிலே தணியாத பக்தி கொண்டிருந்ததனால் தாம் பணியாற்றிய ஊர்களிளெல்லாம் தேவதாயின் பெயரிலேயே ஆலயங்கள் நிறுவினார்.

1717ம் ஆண்டு அடிகளார் ஏலாக்குறிச்சி வட்டாரக் குருவாகப் பணியாற்றினார். [illegible] அரியலூர், மழவராயர் என்னும் குறுநில மன்னரது ஆளுகையின் கீழ் இருந்தது. இக் குறுநில மன்னன் மதுரையில் அரசோச்சிய நாயக்க மன்னருக்குத் திறை செலுத்துபவன். சுவாமிகள் அரியலூர் சென்று குறுநில மன்னனது நட்பைப் பெற்றதுமல்லாமல், இடையூறின்றி கிறிஸ்து சமயப் பணியை செவ்வனே செய்ய ஏலாக்குறிச்சியில் ஓர் அழகிய மாதா கோவிலும் நிறுவினார். அப் பகுதிக்குத் திருக்காவலூர் என்று பெயரிட்டு தாம் கட்டிய கோயில் கொண்ட அம் மாதாவை திருக்காவலூர் அன்னை என அழைத்தார். மரியன்னைபால் மிகுந்த பக்தி கொண்டவராய் மக்களிடையே தேவ அன்னையின் பக்தியை வளர்த்தார். அடிகளார் ஏலாக்குறிச்சித் திருக்காவலூரில் பல வருடங்கள் வாழ்ந்தார். இங்கு வாழுங்கால் முனிவரவர்கள் தமிழ் இலக்கியங்களை நன்கு கற்று தமிழில் நிகரற்ற புலமை எய்தினார்.

மேலும் அடிகளார் தமிழ் நாட்டின் வடபகுதியிலுள்ள விருத்தாச்சலத்துக்கு 6 மைல் தொலைவிலுள்ள கோனான்குப்பம் எனும் சிற்றூரில் அன்னை பெயரால் ஓர் கோவில் கட்டி மரியாளின் திருவுருவை தமிழ் நாட்டுப் பெண் உருவில் அமைத்து அம் மரியன்னையை பெரியநாயகி எனப் பெயர் சூட்டினார். இப் பெரியநாயகி மாதாவின் அருளையும் அவளின் துணையையும் பெற்று அடிகளார் பாடிய நூலே "*தேம்பாவணி*" எனும் தமிழ்த்தேன் சிந்தும் அரும்பெரும் காப்பியமாகும். இந் நூல் இயற்றிய காலம் 1726 – 1727ம் ஆண்டுகளாகும். தேம்பாவணியை தைரியநாதர் எனும் பெயர் சூடிய பெஸ்கியடிகள் மதுரையில் உள்ள புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றினார். இவரது தேம்பாவணி நூல் சிந்தாமணி, கம்பராமாயணம், திருக்குறள், நாலடியார், ஆகிய நூல்களோடு ஒப்பிடத்தக்க சிறப்புப் பெற்றிருந்தமையாலும் அடிகளாரில் 'புலமை வீரமும்', 'சமய வீரமும்', 'உளத்தூய்மையும்' விளங்கக் கண்ட மதுரைச் சங்கப் புலவர்கள் அவரை 'வீரமாமுனிவர்' என்று போற்றினர். மதுரை சங்கப் புலவர்கள் சூட்டிய 'வீரமாமுனிவர்' எனும் பெயரே இவருக்கு புகழோடு வாழும் பெயராகிவிட்டது.

1727ம் ஆண்டு தரங்கபாடி தேனிய சபையார் (Danish Mission) கத்தோலிக்க சமயத்தைத் தாக்கி எழுதினர். வீரமாமுனிவர் தேனிய சபையாரின் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்து தேவவிளக்கம், பேதகமறுத்தல், லுத்தேரினத்தாரியல்பு என்னும் 3 உரைநடை நூல்களை இயற்றி அவர்களை வன்மையாகக் கண்டித்தார்.

தஞ்சாவூரிலும் அவ்வூரைச் சுற்றியுள்ள இடங்களிலும் கொடும் பஞ்சம் உண்டாயிற்று. இப் பஞ்சக் கொடுமையினின்று மக்களைக் காத்தற்பொருட்டு திருக்காவலூர் அன்னையை அடைக்கலநாயகியென மனமுருகிப் பாடி அன்னைக்கு புதியதோர் வழிபாடு செய்து மக்களைக் கொடும் பஞ்சத்தினின்றும் காத்தார். அன்னை பால் அவர் கொண்ட பக்திப் பெருக்கால் அவர் திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை, கித்தேரியம்மாள் அம்மானை ஆகிய பிரபந்த நூல்களைப் பாடினார்.

திருக்காவலூர் அன்னையை வழிபட்டு பாடிய திருக்காவலூர் கலம்பகம் மிகவும் தொண்டையும், தமிழ் தொண்டையும் கண்ட குறுநில மன்னனான அரியலூர் மழவராயன். 1734ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் நாள் தனது ஆளுகைக்குட்பட்ட ஏலாக்குறிச்சி கோவிலும் அதைச் சேர்ந்த வீடும் அவைகள் அமைந்த இடமும் வீரமாமுனிவருக்கு நன்கொடையாக அளித்தான். வீரமாமுனிவர் தமிழ்நாட்டிற்கு வந்தபின்பு தெலுங்கு, பாரசீகம், இந்துஸ்தானி ஆகிய மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். 1735ம் ஆண்டு சந்தா சாகிபு என்னும் நவாபு திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டு அதை கைப்பற்றிக் கொண்டான். வீரமாமுனிவர் அந் நவாபிடம் சென்று இந்துஸ்தானி மொழியில் நயமுடன் பேசி அவரது நட்பையும் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டார். முனிவரின் திறமையையும் சாதுரியத்தையும் கண்டு வியந்த சந்தாசாகிபு முனிவருக்கு திவான் பட்டம் அளித்தார். மேலும் சந்தாசாகிபு வீரமாமுனிவருக்கு 350 சான் தோம் நாணங்களை உபகாரச் சம்பளமாகப் கொடுத்தார். *(ஒரு சான் தோம் = 8 ஷி4பென்ஸ்)*

1741ம் ஆண்டு மகாராஷ்டிரர்கள் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி சந்தாசாகிபைக் கொன்றனர். சந்தாசாகிபின் நண்பரான முனிவரையும் துன்புறுத்த எத்தனித்தனர். இதனை அறிந்த முனிவர் தூத்துக்குடிக்கு வந்து தங்கி, பின் மணப்பாட்டை அடைந்தார். சில ஆண்டுகளுக்குப் பின் முனிவரவர்கள் கேரள நாட்டிலுள்ள அம்பலக்காடு என்னும் ஊரிலிருந்த யேசு சபை மடத்தின் தலைவராக ஏற்படுத்தப்பட்டார்.

1747ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் நாள் இறைவன் திருவடியடைந்தார்.

வாடாத அணியாம் '*தேம்பாவணி*'யைத் தந்த இப் பெரும் பேரறிஞர், வீரமாமுனிவர் நம் தமிழுக்கு கிடைத்த "தெய்வத் திருவருட்பேறே"

உசாத்துணை :


1. தேம்பாவணிச் சொற்பொழிவுகள் (தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி)
2. வீரமாமுனிவர் கத்தோலிக்க இலக்கியங்கள் (திருமறைக் கலா மன்றம்)
3. தேம்பாவணி ஆராய்ச்சி ஜே. ஜி. சுந்தரம் தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாதுகாவலன் 125ஆவது ஆண்டு மலரிலிருந்து...

## தமிழ்க் கிறிஸ்தவ உலகில் எழுத்தாற்றலால் முத்திரை பொறித்த அறிஞர்களின் பங்களிப்புகளை தாங்கிவந்துள்ளது பாதுகாவலன்

### ஜேர்மன்-தொடுவானம் ஆசிரியரின் ஆசிச் செய்தி

"இறைவன் நகரைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்" என்னும் வாக்கினைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படும் சத்தியவேத பாதுகாவலன், தனது ஐந்தாம் வெள்ளிவிழாவைக் கண்டுள்ளது என்பதனை நினைக்குந்தோறும் மனம் நிறைவெய்துகின்றது.

நம் தாயக மண் கொண்டுள்ள பல இன்னல்கள் மத்தியில், திருமறைச் சேவையை தொடர்ந்து ஆற்றிவந்துள்ள பாதுகாவலனின் சாதனைகளை எண்ணிப் பெருமிதம் கொள்ளல் இயல்பானதே. தனக்கே உரித்தான பாணியில் அடக்கமாக, எனினும் ஆணித்தரமாக பிழையற்ற தமிழில் தன் எண்ணக்கிடக்கைகளை வெளியிட்டு, எக்கட்டத்திலும் உறுதியோடு பணியாற்றி வந்துள்ள பாதுகாவலன் இலங்கையில் புகழ்மிகு ஊடகத்துறையில், மிகப் பழைய அனுபவம் மிக்க வெளியீடுகள் மிகச் சிலவற்றில், ஒன்று என்பது பெருமைபடக்கூடிய ஒன்றே.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் அறிவினாலும், சமய ஈடுபாட்டாலும் தனக்கெனத் தனி இடம் வகித்து, புகழ்பெற்ற நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்னும் சொற்கலைப் புலவரின் பிரச்சார ஊடகமாக பாதுகாவலன் சிறப்புப் பணி ஆற்றிவந்துள்ளது. 1875ல் பிறந்த அந்தப் பேரறிஞர் ஏறத்தாள அதே காலக்கட்டத்தில் தோன்றிய பாதுகாவலன் ஊடாகவும், தன் ஆற்றல் கொண்ட ஆராய்ச்சி எண்ணங்களை வெளியிட்டமை எதிர்பார்க்கத்தக்கது ஒன்றே.

அனுபவம் மிகக் கொண்டவரும் பெரும் கிறிஸ்தவ தமிழ் அறிஞருமான அருளப்ப முதலியார் எனும் தென் இந்திய அறிஞரை ஆரம்பகாலப் பதிப்பாசிரியராகக் கொண்டு செயற்படத் தொடங்கிய பாதுகாவலன், ஈழத்தின் தமிழ்க் கிறிஸ்தவ உலகில் தன் எழுத்தாற்றலால் முத்திரை பொறித்த, ஏறத்தாள, எல்லா அறிஞர்களது பங்களிப்புகளையும் தாங்கி வந்துள்ளது. ஓய்வு பெற்ற முன்னைநாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை, இந் நாள் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உட்பட, பல அருட்தந்தையர்கள், காலத்துக் காலம் காவலனுக்கு உயிரூட்டம் தந்துள்ளனர். யாழ் ஜெயம், இளவாலை வித்துவான் அமுது, தாளையடி அறிஞர் சவரிமுத்து ஆகியோரது படைப்புக்களைப் பாதுகாவலன் பலமுறைகள் தாங்கி வந்துள்ளது.

காவலன் எண்ணற்ற ரசிகர்களையும், படைப்பாளர்களையும் உருவாக்கியுள்ளது என்று கூறுதல் மிகை அல்ல. இறைவன் அருளில் தொடர்ந்தும் காவலன் பணி ஆற்றுவான் என்று எதிர்பார்த்து அதன் மகிழ்ச்சியில் கலந்து, ஜேர்மன் தமிழ் ஆன்மீகப் பணியகம் சார்பில் வாழ்த்து இயம்பி நிற்கின்றோம்.

அருள்திரு பேணாட் றெக்னோ, ஆசிரியர்-தொடுவானம்

# எனது பார்வையில் பாதுகாவலன்

எஸ்.ஏ. நாதர்
மறையாசிரியர் ~வன்னி

சத்தியவேத பாதுகாவலன் என்ற பெயரில் 125 ஆண்டுகளுக்கு முன்பு தொடக்கப்பட்ட இலங்கையின் முதல் கத்தோலிக்க பத்திரிகையாகிய (தமிழ்) காவலனை எண்ணிப் பார்க்கும்போது என்னையறியாமலே என் உள்ளம் சிலிர்க்கின்றது. காரணம் பல இலட்சக்கணக்கான கத்தோலிக்கர்களைக் கொண்ட தமிழ்நாட்டில் கூட அக்காலப் பகுதியிலே இப்படியொரு கத்தோலிக்க வார இதழ் தோன்றியிருக்குமோ? என்பது என்னால் கணிப்பிட்டுச் சொல்ல முடியாதிருக்கின்றது.

எனது அனுபவத்தின் படி கிட்டத்தட்ட 1965ஆம் ஆண்டில் இருந்து பாதுகாவலன் வாசகர்களில் நானும் ஒருவனானேன். காவலனில் விருது வாக்காக 'கர்த்தர் நகரத்தைக் காக்காவிடில் அதைக் காப்பவன் கண் விழிப்பது வீண்' என்று எழுதியுள்ளதை பலமுறை எனக்குள்ளே சொல்லிப் பார்த்து, அதன் அர்த்தம் எதுவுமே புரியாத நிலையில் இருந்த என்னை 125 ஆண்டுகளுக்குப் பின் இவ் விருது வாக்கை நினைத்துப் பார்க்கும் போது எவ்வளவு தீர்க்க தரிசன உணர்வுடன் இதன் ஆரம்பகால எழுத்தாளர் சுட்டிக்காட்டி, இன்றைக்கு மட்டுமல்ல என்றென்றைக்குமே பொருந்தக்கூடிய விதத்தில் இறை வார்த்தையைச் சொருகியிருக்கிறார் என்னும் போது உள்ளம் பூரிக்கிறது.

இடைப்பட்ட காலங்களில் அருட்பணி சா. ம. செல்வரட்ணம் அடிகளார் தொடர்ச்சியாக எழுதிவந்த எண்ணியதை எண்ணியபடி எழுதுகின்றேன் என்ற கட்டுரை என் மனதை நிரம்பவே கவர்ந்துள்ளது. காரணம்? துணிச்சலுடன் சமகால நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து, சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய விதத்தில் சொல்லி வைத்து சமுதாயத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்தார். அத்துடன் இளைய தலைமுறையினரை சீர்திருத்த வேண்டி 'திரை விமர்சனம்' என்றொரு பகுதியை தொடக்கி வைத்து அஞ்சா நெஞ்சத்துடன் திரைப்படங்களின் பிழைகளைக் சுட்டிக் காட்டி கடைசிப் பந்தித் தொகுப்புரை யில் நறுக்குத் தெறித்தாற் போல நாலுவரிகளில் கண்டித்தோ, பாராட்டியோ முடித்துவைப்பார். இவரது விமரிசனங்களைப் படித்து, தமது பிள்ளைகளை திரைப்படங்களுக்கு அனுப்பிவைத்த பெற்றோர் பலரை எனக்குத் தெரியும்.

கிட்டத்தட்ட 87–90ம் ஆண்டு காலப்பகுதிகளில் அமரர் அருட்பணி அருமைநாயகம் அடிகளாரின் நிர்வாகத்தின் கீழ் பாதுகாவலன் அலுவலகம் இயங்கிவந்த காலப்பகுதிகளில் பாதுகாவலன் ஒரு புதிய சகாப்தத்தைக் கொண்டுவந்தது என நினைக்கின்றேன். திருமணமானவர்களுக்கும் திருமண ஆயத்தம் செய்வோருக்கும் சொல்ல வேண்டியவைகளை 'குடும்பம் ஒரு கதம்பம்' என்ற பகுதியிலும் சின்னஞ் சிறார்களை உருவாக்கி, நல் நாற்று மேடைகளாக அவர்களை வளர்த்தெடுக்க 'காவலன் கண்மணிகள்' என்றொரு பகுதியையும் அனைத்துத் தரப்பினரும் திரு விவிலிய அறிவைப் பெற்றுக் கொள்ளவும் உயர்தர மாணவர்களின் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் 'அருள்வாக்கு அறிவோம்' என்றொரு பகுதியையும் தொடக்கி வைத்ததோடு இலங்கைத் திருச்சபை – உலகத் திருச்சபை பற்றிய உடனடித் செய்திகளைத் தந்துதவிய பெருமை ஒரு காலகட்டத்தில் இடம்பெற்றது.

95ம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின்போது அனைத்து நிர்வாகங் களுமே ஸ்தம்பித்த நிலையில் இருந்தபோது, இப் பத்திரிகையின் தகவல்களைப் பெறமுடியாது ஏங்கித் தவித்த பல உள்நாட்டு வெளிநாட்டு வாசகர்களை நான் அறிவேன். ஆனால் மீளக்குடியமர அரசாங்கம் அனுமதித்தபோது, உடனடியாக எமது பத்திரிகை புதிய உத்வேகத்துடன் நவீன கணனி முறையில் அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் பொறுப்பில் வெளிவரத் தொடங்கியுள்ளது. அது மட்டுமல்லாமல் வாசகர் வட்டம், எழுத்தாளர் வட்டம் எனப் பணிகளையும் பொறுப்புக்களையும் விரிவாக்கியதோடு உலகின் பல்வேறு நாடுகளுக்கும் இடம்பெயர்ந்து வாழும் கத்தோலிக்க மக்களை ஒன்றிணைக்கும் ஒரு ஊடகமாகவும் அவர்களின் கருத்துக்களையும் விமர்சனங்களையும் பக்கச் சார்பின்றி நடுநோக்குடன் வெளியிட்டு வருவது வரவேற்கத்தக்கது.

அத்தோடு, திருச்சபையின் உண்மை நிலைப்பாட்டை தமிழ் ஆயர்கள் வெளியிடும் போதெல்லாம் தணிக்கை காரணமாக ஏனைய பத்திரிகைகள் வெளியிடத் தயங்கும் போதெல்லாம் இதுவே எமது நிலைப்பாடு என்பதைத் துணிவோடு உரத்துக்கூறும் எங்கள் பாதுகாவலனை நாம் இருகரம் கூப்பி வரவேற்கத்தான் வேண்டும்.

குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் நடைபெறும் ஒடுக்குமுறைகளை அடிக்கடி நேரடியாக அவதானித்து வரும் யாழ் ஆயர், மன்னார் ஆயர் அவர்களது கண்டனங்களையும் அவர்களது உண்மை நிலைப் பாட்டையும் அரசிற்கு எடுத்துச் சொன்ன உண்மை நிலைமைகளையும் எவ்வித தயக்கமுமின்றி உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்திய துணிவு வேறெந்தப் பத்திரிகைக்கும் இல்லையென்றே நான் கூறுவேன். அழுத்தங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் பணியாது, உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே திருச்சபையின் பணி என்பதை காவலன் இன்று உரத்துக் கூறுகிறது.

மனவருத்தத்துக்குரிய ஒரு செய்தியையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வார மலராக ஆரம்பத்தில் தோன்றிய இப்பத்திரிகை 'இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு' என்று முகப்பிட்டு வரும் இப்பத்திரிகை மாத இதழாக வந்து கொண்டிருப்பது ஏன்? என்று வாசகர்களுக்கு தெளிவுபடுத்தலாமே?

# பாதுகாவலன் - ஒரு நோக்கு

திரு. ம. யேசுதாசன்
மறையாசிரியர்

யாழ். மண்ணில் ஒரே கத்தோலிக்க ஏடான பாதுகவாலன் கடந்த 125 ஆண்டுகளாக இந்த மண்ணின் கத்தோலிக்க வாசகர் மட்டத்தில் தன்னைப் பதிவு செய்துள்ளது. காலத்துக்காலம் பல விதமான கருத்துக்களைத் தாங்கி இறைமக்களின் ஆன்மீக வாழ்வுக்குப் புத்துயிர் அளித்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஒரு பத்திரிகைக்கு சிறந்த ஆசிரியரே (Editor) அடிநாதமாக விளங்குபவர். அவரின் கைகளில் தான் அப்பத்திரிகையின் தரம் பொலிவுற்றுத் திகழ்கின்றது. அந்தவகையில் பாதுகாவலன் பத்திரிகைக்குக் காலத்துக்காலம் திறமை வாய்ந்த குருக்கள் ஆசிரியர்களாகச் செயற்பட்டு இருக்கின்றார்கள். தங்களால் இயன்றவரை இப் பத்திரிகையின் உருவாக்கத்திற்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். சிறப்பாக ஆசிரியர் தலையங்கத்தைத் தாங்கி சமய வாழ்வு, சமூக நீதி, அரசியல் பொருளாதார மலர்ச்சி என்கின்ற பல பரிமாணங்கள் ஊடாகத் தன்னை வளர்த்து எடுத்திருக்கின்றது.

17.02.2000 அன்று அருள்பணி அன்ரன் மத்தாயஸ் அவர்கள் பாதுகாவலன் ஆசிரியராகப் பணிபுரிந்த காலங்களில் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களை 'இன்றைய உலகில் நாம்' எனும் நூலாக வெளியிட்டார். இது மிகவும் பாராட்டப்பட்ட நிகழ்வாக அமைந்தது. இத்தலையங்கங்கள் சமூக, ஆன்மீக விழுமியங்களின் பரிமாணங்களைக் கொண்டதாக அமைந்தது.

கிறிஸ்துவும் தாம் வாழ்ந்த காலத்தில் அன்று வாழ்ந்த மக்கள் மத்தியில் சமூக – ஆன்மீக விழுமியங்களைக் கட்டியெழுப்பப் பாடுபட்டார். ஆன்மீக குருட்டுத்தனங்களைக் கண்டித்தவேளை சமூகத்தில் புரையோடிப்போய் இருந்த அநீதிகள் – அடாவடித்தனங்கள், ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் கண்டித்தார். சொல்லவேண்டியவைகளை முகம்பாராது எந்த இடத்திலும் சுட்டிக்காட்டினார். சமூக அந்தஸ்தில் உயர்ந்து விளங்கிய பரிசேயர் – சதுசேயர், குருக்கள் முதலியோரும் இயேசுவின் கண்டனக் கணைகளிலிருந்து தப்ப முடியவில்லை. பத்திரிகைத்துறையும் இதைப்போன்ற ஒரு புனித பணியே. ஆயுதத்தைவிட வலிமையுடையது பேனாமுனை என்பர். இந்தப் பேனாமுனை வரலாறுகளையே மாற்றி திருப்புமுனைகளை ஏற்படுத்தியதை ஏடுகள் பல எடுத்தியம்புகின்றன.

இப் பணியை பாதுகாவலன் வார இதழ் கடந்த 125ஆண்டுகளாக செய்து வருவது பாராட்டத்தக்கதாகும். அன்று குழந்தைகளாக தத்தித் தளர்நடை போட்ட காவலன் காலத்தின் வளர்ச்சிப் பாதையூடாக வளர்ந்து இன்று வரலாற்றில் தடம் பதித்திருக்கின்றான். ஒரு பத்திரிகை என்றால் பல்சுவை கொண்டதாக அது அமைய வேண்டிய காலத்தின் தேவை ஒன்றுண்டு. ஒரு சனரஞ்சகமான பத்திரிகையைத்தான் வாசகர் தேடிப் படிப்பது வழக்கம். ஆன்மீகத்துறை சார்ந்த பத்திரிகை என்றால் 'இதில் என்ன இருக்கு' என்று ஒரு மூலையில் தூக்கிப் போடுகின்ற பண்பாடு இன்று மலிந்திருக்கின்றது கண்கூடு. ஒரு நூற்றாண்டைக் கடந்து நிற்கும் காவலனும் இத்தகைய நிலைக்கு பல சந்தர்ப்பங்களில் ஆளானதும் உண்டு. 'உதென்ன பேப்பர்' சும்மா இரண்டொரு ஆட்கள் மட்டும் பிரசங்கம் எழுதுகிற பேப்பர். உதில் என்ன சுவை இருக்கு என்று ஒரு சாரார் இதை எப்போதுமே ஒதுக்கி வந்தனர். இன்னும் சிலர் இதை மறைமாவட்ட ரீதியில் இன்னும் நன்றாக உருவாக்கலாமே என்ற அங்கலாய்ப்போடு மட்டும் நின்றுவிட்டனர். இதற்குரிய ஆலோசனைகளை வழங்கவோ அன்றேல் இதன் பரம்பலுக்கு உதவிசெய்யவோ முன்வரவில்லை. ஒரு கணிசமான தொகையினர் காவலன் இதழுக்கு கரம் கொடுத்து அதை வாங்கிப்படித்து பயன் கண்டனர்.

ஒரு பத்திரிகையின் வட்டம் விரிவடைவதற்கு அதன் தரம் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. கத்தோலிக்க பத்திரிகை என்றாலும் அது ஆன்மீகத்தோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. மாறாக சமூக பொருளாதார, அரசியல் விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ச்சியடைவதே.

பத்திரிகை தொடங்கிய ஆரம்ப காலத்தில் இந்த இலக்கு எட்டப்படவில்லை என்பது உண்மையே. ஆனால் வத்திக்கான் சங்க எழுச்சிக்குப்பின் காவலன் பத்திரிகை பல துறைகளில் முன்னேறி இன்று அபரிமிதமான வளர்ச்சி கண்டிருப்பதை மறுக்கமுடியாது. இன்று காலத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு பல உள்ளீடுகளைக் கொண்டு விளங்குகின்றது.

உலகெங்கும் இருந்து திரட்டப்படும் கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளை, அதற்கு ஏற்படும் இன்னல்களை, அதன் வளர்ச்சிப்படிகளை இங்கு வாழ் கத்தோலிக்க மக்கள் அறியும் வண்ணம் தருகின்றது. இன்னும் வேதாகமம், இறையியல், வழிபாடு, சிறுவர் பகுதி போன்ற பல்வேறு துறைகளின் ஆக்கங்களுடன் காவலன் இன்று ஒளிர்கின்றான். நாம் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டியது அவசியம். இது ஒரு சஞ்சிகை அல்ல. மாறாக படித்தோர் – பாமரர் யாவரும் பேதமின்றிப் படிக்கும் பத்திரிகை. சிலர் இதில் ஆழமான இறையியல் பொதிந்த கட்டுரைகள் வருவதில்லை என்பர். இது பலரும் படிக்கும் ஒரு பத்திரிகை என்பதை முதலில் நினைவில் கொண்டால் இவ்வித குறைகள் சொல்வதற்கு இடமிருக்காது.


எனவே எதிர்காலத்திலும் பாதுகாவலன் பணிகள் தொடர வாழ்த்துக்கள் கூறி நாமும் எமது பங்களிப்பைச் செய்வோம். இன்று தொழில்நுட்ப ரீதியான பத்திரிகைத் துறை பல படிகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. அந்த வகையில் காவலனும் முன்னேறினால் இன்னும் சிறப்பாக அமைவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவில் ஓர் விடிவெள்ளி

இறைத்திட்டம் எல்லாமே தூய ஆவியின் தூண்டுதலால் செயலாக்கம் பெறுகிறது. இதே போன்றுதான் செபமாலைத் தாசர் சபையின் ஆரம்பமும் தூய ஆவியின் சிறப்பான செயல் வடிவமாகும்.

1920களில் ''மறைபரப்புப் பாப்பிறை'' என்று பாராட்டப் பெற்ற திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் தூய ஆவியின் ஏவுதலால் மறைபரப்பு நாடுகளில் கிறிஸ்தவ சமயம் வளர்ச்சியுறாததற்குக் காரணம் என்னவென்று ஆழமாகச் சிந்திக்கலானார். மறைபரப்பு நாடுகளில் பணிபுரியும் போதகர்கள் அந்நாட்டு மக்களுக்குச் செய்யும் அன்புப் பணிகளையும், தன்னலமற்ற அரும்பெரும் சேவைகளையும் அவர் நன்கு அறிந்திருந்தார். அப்படியிருந்தும் இம் மக்கள் கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொள்வதற்கு இறைவனின் அருள் மிகவும் இன்றியமையாதது என்றுணர்ந்து செப, தவத்திற்கென தங்களை அர்ப்பணித்த காட்சித் தியான சபைகள் நிறுவப்பட வேண்டும் எனத் தீர்மானித்தார்.



தவத்திரு வ.அ. தோமஸ் அ.ம.தி.

## ஆவியில் பகிர்வு

இதே ஆண்டுகளில் பெல்ஜியம் நாடு தந்த அருள்திரு ஜோண் அல்பர்ட் கியோமர் அ.ம.தி அவர்களும் இலங்கையின் யாழ். நகர் தந்த தவத்திரு வஸ்தியாம்பிள்ளை அன்ரனி தோமஸ் அ.ம.தி அடிகளும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்றினார். நண்பர்களாகவும் விளங்கினர். எனவே விடுமுறை நாட்களை சேர்ந்தே செலவழித்தனர். அப்பொழுதெல்லாம் தம்மில் தூய ஆவி கொடுக்கும் ஞான ஏவுதல்களை தவத்திரு வ.அ. தோமஸ் அடிகளார் அருள்திரு கியோமர் அடிகளாரிடம் பகிர்ந்து கொள்வார். இதில் மிக முக்கியமானதும் அடிக்கடி கலந்துரையாடப்படுவதும் என்னவென்றால் இலங்கை, இந்தியா மனந்திரும்ப வேண்டுமாயின் செப தப வாழ்வை வாழும் துறவு சபைகள் நிறுவப்பட வேண்டும் என்ற எண்ணங்களும் ஏக்கங்களுமே.

1923ல் ஜே.ஏ. கியோமர் அ.ம.தி. அடிகளார் யாழ். மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்று 1924 மார்ச் மாதம் 9ஆம் நாள் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அருள்திரு அ.ம. ஸ்ரீபன் செ.தா.

ஆயர் கியோமர் ஒரு தியான யோகர் என்று கூறலாம். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வரலாறு, மொழியியல் போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்றவர். இவர் உலக மகா யுத்தத்தில் உதயமாகிய நவீன ஆயுதப் போரின் பயங்கரத்தையும், வரலாற்றுப் பாடங்களையும் அதன் தொடர்ச்சியையும் ஊகித்துணர்ந்தவர். பத்திமாவின் தீர்க்க தரிசனங்களை நன்குணர்ந்து, ருசிய கம்யூனிஸ்த புரட்சியையும், அதன் சர்வதேச பரவலாக்கத்தையும், ஐரோப்பிய நாஸ்திகம், பாஸிசம் ஊடுருவல் களையும் நற்செய்தியின் விழுமியங்களின் ஒளியில் அவதானிக்கத் தொடங்கினார். இது அன்றைய யாழ். திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு தூய ஆவி காட்டிய காட்சிகளாகும்.

இதே பின்னணிகளின் எண்ணங்களினால் உந்தப்பட்டு இறைஒளி தேடியவர் தவத்திரு தோமஸ் அடிகள். இவர் இறைவழியிலிருந்து இறைஉணர்வுகளிலிருந்து, உண்மை மார்க்கத்திலிருந்து, இயேசுவின் நற்செய்திக் கோட்பாடுகளிலிருந்து விடுபட்டுத் தூரச் சென்று பாவ வழியில், அழிவின் பாதையில், போரின் சூழலில் செல்லும் மனுக்குலத்தை இறைவனின் பாதத்தில் வைத்துக் காக்க, உண்மை வழியைக் காட்ட, இறை மகிமைக்கு இழைக்கப்படும் பாவங்களுக்குப் பரிகாரம் செய்து இறைவனின் கோபாக்கினையிலிருந்து மனுக்குலத்தை விடுவிக்க, இயேசு கொடுத்த மீட்பின் பலன்களை மக்கள் அனுபவிக்கச் செய்ய, மரியன்னையின் மாசற்ற இருதயத்தில் மனுக்குலத்தை வைத்து அணுக்குண்டு யுகத்தில் வரும் பேரழிவுகளிலிருந்து மக்களைக் காக்கும் மாசற்ற இல்லம் அந்த மாமரியின் அமல இதயம் என்று கரமுயர்த்திப் பறைசாற்றி மக்களை வான் வீடு வழி நடத்த செப, தப வாழ்வு வாழும் தியானயோக சபைகள் (ஆசிரமங்கள்) அவசியம் நிறுவப்பட வேண்டும் என்று தூய ஆவியால் ஏவப்பட்டுக்கொண்டிருந்தார்.

## செப,தப தியான சபையின் தோற்றம்

இந்த திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் ஆயர் ஜே.ஏ. கியோமர் அருட்குரு பி.ஏ. தோமஸ் ஆகிய மூன்று அர்ப்பண ஆன்மாக்களையும் தூய ஆவி ஆட்கொண்டு ஓர் மாபெரும் இறைத் திட்டத்தை நிறைவேற்ற வழிநடத்தினார் என்பதை வெளிப்படையாகக் காண்கின்றோம். தூய ஆவி ஒரே காலத்தல் இவர்களில் செயல்பட்டு விண்ணரசின் விளைநிலத்தை இம் மண்ணுலகில் தோற்றுவிக்க இன்றியமையா சாதனமாகிய செப தவ தியான யோக சபையை நம் இலங்கை நாட்டில் யாழ். மறைமாவட்டத்தில் தோலகட்டி என்னும் இடத்தில் தோற்றுவித்தார்.

28.09.1926ஆம் ஆண்டு திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் ''திருச்சபை பற்றிய உண்மைகள்'' என்ற சுற்றுமடலை அனைத்து ஆயர்களுக்கும் அனுப்பியிருந்தார். இந்த சுற்றுமடல்தான் தூய ஆவி இந்த இறைத் திட்டத்தை நிறைவேற்ற வெவ்வேறு ஆன்மாக்களில் செயலாற்றி அதற்கேற்ற வகையில் அவைகளை வழிநடத்துகிறார் என்பதை வெளியாக்குகிறது.

திருத்தந்தையின் இச் சுற்றுமடல் தாங்கி வந்த முக்கிய குறிப்பு தவத்திரு தோமஸ் அடிகளாரிடம் தாம் கல்விக்கூடத்திலும், ஒய்வெடுத்து உரையாடும் வேளைகளிலும் கேட்ட அதே வார்த்தைகள் தான் என்பதை ஆயர் அவர்கள் உடனேயே உணர்ந்துகொண்டார்.

காலதாமதம் இல்லாமல் தோமஸ் அடிகளாரை புனித பத்திரிசியார் கல்லூரியிலிருந்து வரவழைத்து திருத்தந்தையின் சுற்றுமடலை மகிழ்வோடு கொடுத்து மடல் முழுவதையும், குறிப்பாக நான் கோடிட்ட குறிப்புகளையும் வாசியும். இறைவன் உமது செபத்தையும் தவத்தையும் ஏற்றுக் கொண்டார் என்று கூறினார். பின் நம் யாழ். மறைமாவட்டத்தில் செப தப வாழ்வை வாழும் தியான யோக சபைகளை ஏற்படுத்தி திருத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினால் என்ன? என்று ஆயர் அவர்கள் தோமஸ் அடிகளாரைக் கேட்டார். ஆனால், தாம் இம் மாபெரும் பணியை நிறைவேற்ற தகுதி அற்றவன் என்று தாழ்மையோடு எண்ணி நின்ற வேளையில், நீர்தான் இதைச் செய்ய வேண்டும் என்று தூய ஆவியின் வெளிப்படுத்தல் ஆயர் வழி வந்தது. ஆயரின் ஆணை ஆண்டவரின் ஆணை என்று ஏற்று ஓயாத செப தவத்தோடு இம் மாபெரும் பணிக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய தூய ஆவியின் துணையை நாடினார்.

## அர்ப்பணத்தின் முன்மாதிரி

ஆயரின் அறையிலிருந்து நேராக மரியன்னையின் பேராலயம் நோக்கிச் சென்ற தோமஸ் அடிகள் யேசுவின் திரு இருதயத்திற்குத் தன்னை அர்ப்பணித்து தனது இப் புதிய பணியின் மனச்சுமையை அந்த திரு இருதயத்தில் இறக்கி வைத்தார். மிகவும் ''இரக்கமுள்ள தாயே....'' என்ற செபத்தை செபித்துத் தன்னை மரியன்னையின் அமல இதயத்துக்கு ஒப்புக்கொடுத்தார். ''புதிய துறவு சபையை உருவாக்கும் பணியில் என்னைக் கருவியாகப் பயன்படுத்தி, இச் சபைக்கு நீரே தலைவியாகவும் வழிநடத்துபவளாகவும் இருந்தருளும்'' என்று மனமுருக மரியன்னையை வேண்டினார். இவ்வாறு பல நாட்கள், மாதங்களாக மன்றாடி வந்தார். தம் நண்பக் குருக்களிடமும், மாணவரிடமும் தனது இக் கருத்துக்காக மன்றாடக் கேட்டுக்கொண்டார்.

யேசுவின் பணியானது நற்செய்தியின் வழி, சிலுவையின் வழி, சோதனையின் களம். ஆபிரகாமைப் போன்று, கன்னி மரியைப் போன்று யேசுவைப் போன்று இறைத் திட்டத்தின் இணையற்ற செயல்கள் ஆற்றப்படும்போது இருள் சூழ்ந்த, கஷ்டம் மிகுந்த, மனச்சுமை மிக்க ஒரு காலம் வரும் அதில் வெற்றிபெற வேண்டும். இந்த வெற்றிதான் இறைத்திட்டத்தை நிறைவேற்ற தூய ஆவியின் துணை உண்டு. தூய ஆவியால் நிறைக்கப்பட்டுள்ளார் என்பதற்கு அடையாளமாகும்.

தோமஸ் அடிகளார் இந்நாட்களில் சபையை ஆரம்பிப்பதற்கு எவ்வித வழியும் காணாது இருள்சூழ்ந்த ஆன்மாவின் நிலையை உணர்ந்தார். ஆயினும் இறைஒளியை வேண்டி அதிகமாக செப தபம் செய்தார். தனது நாளாந்த திருப்பலியில் யேசுவிடம் மனமுருகி மன்றாடினார். திருப்பலியின்பின் 3 முறை ''அருள் நிறைந்த மரியே...'', ''மிகவும் இரக்கமுள்ள தாயே...'', ''புனித மிக்கேல் அதிதூதரே...'' என்ற செபங்களையும் சொல்லி வந்தார். அன்று அவர் கழுத்தில் அணிந்துகொண்ட செபமாலை கழுத்தை விட்டு அகலவில்லை. இது தன்னை முழுவதும் அன்னைக்கு அடிமையாக்குவதன் அடையாளமாகும்.

## பணிவாழ்வில் பணிவோடு

விசுவாச சோதனையில் வெற்றி பெற்றதும் தூய ஆவியின் ஒளியும் வல்லமையும் வழிநடத்தும். ஆம் ஒவ்வொருவராக இளைஞர் சிலர் தவத்திரு தோமஸ் அடிகளாரை அணுகத் தொடங்கினர். இவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிறு, வியாழன் நாட்களில் ஞான உரைகள் வழங்கி ஆயத்தம் செய்தார். நம் நாட்டில் சாதிச் செருக்கு, மொழிச் செருக்கு, செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு, நாட்டுச் செருக்கு ஆகியவற்றால் மனிதன் தலை நிமிர்ந்து ''நான்'' என்ற ஆணவத்தால் கடவுளை எதிர்க்கவும், கடவுள் படைத்த மனிதனை வெறுக்கவும், இகழவும் முற்படுகின்றான். எனவே, நாம் இதற்குப் பரிகாரமாக இறைவனை முழுமனதுடன் அன்பு செய்யவும், பிற மனிதரை அன்பு செய்யவும் வேண்டும் என்று அறிவுறுத்தினார். நீண்ட நேரத்தை யாழ். மரியன்னை பேராலயத்தில் நற்கருணை நாதர் முன் செலவிட்டு மன்றாடுவார். ''இறைவனுக்கு நிகர் யார்? '' என்ற விருதுவாக்கோடு தான் தொடங்கவிருந்த சபையை ''தாழ்ச்சி'' என்ற தளத்தின் மேல் கட்ட விரும்பினார்.

தந்தை அவர்கள் எதிர்பார்த்திருந்த இறைவனின் நேரம் வந்தது. 1927ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நாள், உலகைக் கையிலேந்தி புதுமைபுரியும் குழந்தை யேசுவின் உலோகத்தினாலான ஒரு சுரூபத்தையும், புனித கன்னிமரியாயின் சுரூபத்தையும் தம்முடன் எடுத்துக்கொண்டு கிறிஸ்தோப்பர், டலிமா என்ற இரு இளைஞருடன் தோலகட்டி என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அங்கு பாழடைந்த நிலையிலிருந்த புனித அந்தோனியாரின் சிற்றாலயத்தையும், குரு இல்லத்தையும் துப்பரவு செய்து அங்கு வாழத் தொடங்கினார். சொல்லொணாத் துன்பங்கள் சூழ்ந்தபோதும் புனித சூசையப்பர் இயேசுவுக்கும் மரியன்னைக்கும் தன்னை முழுவதும் அர்ப்பணித்து வாழ்ந்தது போல நாமும் அவரைக் கண்முன் வைத்து வாழவேண்டும் என்று கூறுவார். கடின உழைப்பையும், களைப்பால் கொட்டும் வியர்வையையும், கூடிவரும் சோர்வையும் இயேசுவோடு பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று இளைஞர்களை ஆரம்ப காலங்களில் வழிநடத்தினார். இந் நாட்களில் இன்னும் 4 இளைஞர் வந்து சேர்ந்துகொண்டனர்.

## வித்தொன்று விருட்சமாகியது

ஆயத்த நாட்கள் முடிந்து ஆயரின் ஆசீருடன் அதிகாரபூர்வமாக சபை தொடங்கும் நாள் வந்தது. இதுதான் 2.2.1928. இதற்கு ஆயத்தமாகத் தந்தை தோமஸ் அடிகள் செப தவ ஞான ஒடுக்கத் தியானம் ஒரு மாதம் செய்து தன்னை ஆயத்தம் செய்து கொண்டார். தூய ஆவிக்காகக் காத்திருந்த அப்போஸ்தலரைப் போன்று அன்னை மரியுடன் காத்திருந்தார்.

1928 பெப்ரவரி 2ஆம் நாள் யாழ். ஆயர் மேதகு கியோமர் ஆண்டகை அவர்கள் தோலகட்டிக்கு மறைமாவட்ட முதல்வருடன் வருகை தந்தார். அன்று முழுவதும் மழை பெய்தது. இது இறைவன் கொடுக்கும் அருள் என்று எண்ணினர். கோவிலில் பாடற் திருப்பலி நிறைவேற்றி அதிகாரபூர்வமாக ஆயரின் ஆசீருடன் சபைதொடங்கியது. ''செபமாலைத் தாசர் சபை'' எனப் பெயரிடப்பட்டது. ஆயர் அவர்கள் துறவியர் ஒவ்வொருவரின் கையில் மாதாவின் சிறிய திருவுருவப் படத்தைக் கொடுத்து ''இவள் வழியாக இறையருளை உலகிற்குப் பெற்றுக் கொடுங்கள்'' என அவர்களை ஆசீர்வதித்து மகிழ்ந்தார்.

அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்த ஜெபப் பூங்காவின் கிளைகள் இன்று இந்தியாவில் 13 ஆசிரமங்களையும் இலங்கையில் 5 ஆசிரமங்களையும் கொண்டு தூயஆவியின் வல்லமையால் வளர்ந்தோங்கி வருகிறது.

### புனிதர் பணிக்காக சாட்சியம் பகருங்கள்

அன்பு சோதரா!

இலங்கை யாழ். மறைமாவட்டத்தில் தோலகட்டி எனும் கிராமத்தில் செப தப வாழ்வின் காட்சி தியான சபையை நிறுவிய தவத்திரு வ. அ. தோமஸ் அ.ம.தி. அடிகளாரின் பணி வாழ்வை ஆராய்ந்து ''புனிதர்'' பட்டம் வழங்க கத்தோலிக்க திருச்சபை ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

தவத்திரு தோமஸ் அடிகளார் வழியாக வேண்டுதல்கள், புதுமைகள், அவர் வாழ்வுடன் இணைந்த அனுபவங்கள், அயலில் கூறும் கருருத்துக்களை ஆதாரங்களுடன் சேகரித்து இப் புனித பணிக்கு பங்களிப்பு செய்து எம் மண்ணின் புனிதராக தெரிவாக தங்கள் பங்களிப்பை சாட்சியம் பகருங்கள்.

கடித மூலமாகவோ, நேரடியாகவோ இம் மாத இறுதிக்குள் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

அருள் ஆச்சிரமம்
இல. 5 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் கற்பித்தல் முறைகளை மையப்படுத்தி 1999இலும் 2001இலும் பயிற்சிபெற்ற மறையாசிரியர்களுக்கு 2001புரட்டாதித் திங்கள் 14ஆம் 15ஆம் 16ஆம் திகதிகளில்

# யாழ். மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் பட்டுத்தெறித்த கருத்துக் களஞ்சியங்கள்

## சென்ற இதழ் தொடர்ச்சி...

மறையாசிரியர்கள் சார்பாக
**கு. மேர்சி சுஜந்தினி**

**குளமங்கால் பங்குத்தந்தை - அருள்திரு இராஜசிங்கம்**

* மறைக்கல்விப் பணிக்குத் தொடர்பு அவசியம்
* பங்குத் தந்தையருடனும் – மறையாசிரியருடனும் – மாணவர்களுடனுமான தொடர்பு அவசியம்
* பாட ஆயத்தம் செய்தல் அவசியம்
* வீட்டு வேலைகளுடனும், பாட ஆயத்தம் இரண்டையும் செய்ய வேண்டும். பாடம் மட்டும் எடுக்கக் கூடாது.
* விளையாட்டு மாணவரைச் சேர்த்து ஈடுபடுத்த வேண்டும். மாணவர்களாய் மாறவேண்டும். ஓர் முயற்சி வெற்றியளிக்குமட்டும் தொடர்ந்து செயற்பட வேண்டும்.
* நிறுவனங்களிலுள்ள ஆட்களைக் கொண்டு கருத்தரங்கு வைத்தல்.
* மறைக்கல்வி நிலையம் மறை ஆசிரியர்களை பங்கில் சந்தித்தல், தொடர்பாடல்களைக் கூட்டுதல்.
* ஒரு பங்கு மறையாசிரியர்கள் வேறு ஒரு பங்கிற்கு மாற்றிப் படிப்பிக்க வைத்தல்.
* மாணவர் மாற்றத்தை விரும்புவர்.
* படக்காட்சி காண்பித்தல் என்பன பற்றிக் கூறினார்.

**நாவாந்துறைப் பங்குத்தந்தை - அருள்திரு ஆர். பீற்றர் துரைரட்ணம்**

* மறைக்கல்வி வகுப்புகள் வெற்றியளித்ததாகத் தெரியவில்லை
* பிள்ளைகளுக்கும், மறை ஆசிரியர்களுக்கும் ஆர்வம் இருந்ததாகத் தெரியவில்லை.
* ஏதோ செய்ய வேண்டும் என்ற நிலை

**அருள்திரு ஜெபரட்ணம்**

* பங்கின் மறைக்கல்விக்கு நிதி அவசியம்
* காலவோட்டத்திற்கேற்ப மாணவர் விருப்பத்தை நிறைவேற்றல். ரி.வி. வாங்க – வசதிகள், ஊக்குவிப்பு முயற்சிகள் நடைபெறல்
* கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்கள் சந்தித்து மறைக்கல்விக்கு மாணவர்களை ஊக்குவிக்கச் செய்தல்
* மாணவர்களை திறனாய்வு செய்யப் பழக்குதல்.
* மறைக்கல்வி மாணவர் மன்றம் உருவாக்குதல்
* ரியூட்டறிகளுடன் தொடர்புகொண்டு நேரம் பற்றிக் கலந்துரையாடல்.

இவ்வாறு இன்று பங்கில் மறைக்கல்விப் பணி என்ன நிலையில் இருக்கின்றது என்ன வகையில் மாற்றம் கொண்டுவரப்படலாம் என்பதற்கு இக் கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

### பட்டிமன்றம்

மறைக்கல்விப் பணிக்கு சினிமாப் படங்களை உபயோகிக்கலாம், உபயோகிக்கக் கூடாது என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஒன்று நடத்தப்பட்டது. வாதப் பிரதிவாதங்கள் வெகுஉக்கிரமாக இருந்தன. இதில் அருள்திரு ஜெபரட்ணம், நடுவராக தீர்வுகொடுக்கும் போது கருத்துக் கூறுகையில்,

கால வளர்ச்சிக்கேற்ப மறைக்கல்வி வளர வேண்டும். இந்த வகையில் சினிமாவில் நல்லதும் உண்டு. தீயதும் உண்டு. எனவே இறை விழுமியங்களையும், சமூக விழுமியங்களையும் காட்டும் சினிமாவை உபயோகிக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்தார்.

திறனாய்வு செய்வதற்காக இரவு 'குட்டி' எனும் திரைப்படம் காண்பிக்கப்பட்டு, அது பற்றிய திறனாய்வு இடம்பெற்றது. கியூடெக் நிலைய இயக்குநர் அருள்திரு ஜெயக்குமார் திறனாய்வு செய்து கருத்துரை கூறினார். பெண்கள் காலந்தரும் சவால்களுக்கேற்ப சமூகத்தில் எதிர்நீச்சல் போட்டு உண்மைகளைப் பகுப்பாய்வு செய்யப் பழக வேண்டும் .... என்ற கருத்தை அழுத்திக் கூறினார். மனமகிழ்வோடும்.... உள நிறைவோடும் இன் றைய நாள் முடிந்தது.

3ஆம்நாள் ஞாயிற்றுக்கிழமைஅதிகாலையே எழுந்துவிட்டோம். அதிகாலை 5.30 மணிக்கு அருள் சகோதரி யசிந்தா மாறி (தி.கு.க.) அவர்களால் ஆன்மீகத் தியானம் நெறிப்படுத்தப்பட்டது. எம் உள்ளத்தின் உணர்வுகளுக்குள் இறங்கி, எம்மைக் கண்டறிய இத் தியானம் உதவி செய்தது.

தொடர்ந்து அன்றைய நாளில் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பணி செய்தவரும், இன்று குருநகர் புனித யாகப்பர் பங்கின் பங்குத் தந்தையராக இருக்கும் ஜெயசேகரம் அடிகளாரால் இன்றைய மறைக்கல்வியின் மெய்மையை வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் பெற்ற மறைக்கல்விப் பணியின் அனுபவத்திலிருந்து மிகவும் சுவாரசியமாகவும், தத்துவரீதியாகவும் எடுத்துரைத்தார். தற்பொழுது நடைபெறும் பாடத்திட்டத்திற்கும், கற்பித்தலுக்கும் பங்கிற்கும், பங்கில் வாழும் சமூகத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. எனவே தொடர்பற்ற மறைக்கல்வியால் பயனுமில்லை. பங்குக்கென தனித்துவமான பாடத்திட்டம் மறைக்கல்வியில் உருவாக்கப்பட வேண்டும். அது பங்கு சமூகத்துடன் தொடர்புடையதாக இருக்கவேண்டும். மக்கள் பிரச்சினைகளில் இருந்து ஆன்மீகத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும்.

திணித்தலை, கட்டுப்படுத்தலை அறவே அகற்ற வேண்டும். மறைக்கல்வி வெறும் சமயம் மட்டுமல்ல, அதில் உலகியல், அரசியல், கிராமியம் இவ்வாறாகப் பல்வேறு விடயங்களும் அடங்கியிருக்க வேண்டும். துணிவோடு, ஈடுபாட்டோடு செயற்பட வேண்டும். மாணவர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்ப புதிய புதிய முறைகளைத் தேட வேண்டும். பிள்ளைகளைப் பெற்றோரை வீடுகளில் சந்தித்தல். பிள்ளைகளின் பெற்றோரின் மனநிலைகளை அறிதல் இவைகளின் ஊடாக எமது பங்கு மறைக்கல்விப் பாடம் அமைதல் வேண்டும். பங்குத்தந்தையின் அனுபவங்களோடு கூடிய கருத்துரை எமக்கு ஆழமான செய்திகளை எமக்குத் தந்ததோடு அவரோடு நிகழ்த்தப்பட்ட கலந்துரையாடல் மனதுக்கு குதூகலமும், மறக்க முடியாததுமாக அமைந்தது.

### பிரியாவிடை

3 நாட்கள் என்ன நடக்கப்போகிறது. நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற வினாக்குறிகளோடு வந்து ஒன்றுகூடினோம். ஒவ்வொரு நாளும் நமது அழைப்புக்கு, வாழ்வுக்குப் பணிக்கு உத்வேகம் ஊட்டுகின்ற பயனுள்ள நாட்களாகவே அமைந்து விட்டது. இயக்குநர் தந்தை நேசராஜா இறைவனுக்கும், நெறிப்படுத்திய அருள்தந்தையர்கள், அருள்சகோதரிகள், பங்குகொண்ட மறையாசிரியர்கள் அனுப்பிவைத்த பங்குத்தந்தையர்கள் ஒழுங்குபடுத்திய மறையாசிரியர் சவுந்தரம் எல்லோருக்கும் நன்றி நவின்றார். மறையாசிரியர்கள் சார்பிலும் நன்றி நவிலப்பட்டது.

*நற்பணியாற்றும் நல்ல மனங்களோடு எல்லோரும் விடைபெற்றோம்.*

# பானையில் இருந்தால்தான்... (உள்ளத்தின் நிறைவில் நின்றே வாய் பேசும்)

அருள்திரு அன்ரனிபாலா

சென்ற இதழ் தொடர்ச்சி...

இன்று திரு இசைக்குழுவினரின் இசை ஞானமற்ற தன்மையினால் மிஸ்ரசாபு தாளத்தில் பாடப்படவேண்டிய ''அன்பில் விளைந்த அமுதமே'', ''நிலையில்லா எம் வாழ்விலே'' என்னும் சிறந்த பாடல்கள் ஆதிதாளத்திலும், கண்டசாபு தாளத்தில் பாடப்பட வேண்டிய ''இறை யேசுநாதா'', ''பலிசெய்ய உன்பாதம்'' என்னும் பாடல்கள் ரூபக தாளத்திலும் பாடப்பட்டு அதன் முழுமையும் வளமையும் சிதைவுறுவதையும் ''என்னை அன்பு செய்தாய்'' என்னும் பாடல் பயிற்சி எடுக்க முடியாது இடைவெளியில் கைவிடப் பட்டதையும் சௌக்க காலத்தில் பாடப்படவேண்டிய ''இருளின் பாதையில்'' என்னும் பாடல் விரைவு தாளத்தில் பாடப்பட்டு சோக உணர்வு கெட்டுப்போவதையும் காணக் கூடியதாக உள்ளது. தாள ஆவர்த்தன முடிவு கவனிக்கப்பட வேண்டும். ''உன்னதங்களிலே'' என்னும் பாடலில் ''பரிசுத்த ஆவியுடன்'' என்னும் இறுதி சொற்களிலும், பீம்பிளாஸ் இராகத்தில் அமைந்த, சிறிதுகாலத்திற்கு முன்பு பாடப்பட்ட ''தூயவர்'' எனும் பாடலில் ''மாட்சிமையால்'' என்னும் சொல்லிலும், மாண்புயர் என்னும் பாடலிலும் ஆவர்த்தனம் முடியும் வரையும் நின்று அடுத்த சொல் தொடங்கப்படவேண்டும். பாடல் எடுப்பிடங்கள் கவனிக்கப்பட வேண்டும். அதாவது ஒரு பாடல் தாளத்துடன் சமமாகவோ (சம எடுப்பு) அல்லது தாளத்திற்கு முன்போ (அதீத எடுப்பு) அல்லது தாளத்திற்குப் பின்போ (1/2, 3/4, 1/4இடங்கள்) தொடங்கப்படலாம். ''மலரினும் சிறந்த'', ''பரமனின் தாயே'', ''மணிமொழி கலைகளிலே'' போன்ற பாடல்கள் 1/2 இடம் தள்ளி தொடங்கப்பட வேண்டும். ''என் பிழையெல்லாம்'', ''ஒரு பாடல் நான் பாடுவேன்'', ''ஒரு வார்த்தை சொன்னால்'' போன்ற பாடல்கள் அதீத எடுப்பாகத் தொடங்கப்பட வேண்டும். அநேகமான பாடல்கள் சம எடுப்பாக அமைந்துள்ளன. எனவே திருஇசைக் குழுவினர் சிறந்த இராக தாள ஞானம் பெற்று விளங்கவேண்டும். திருஇசைக் குழுவினருக்கு மிகவும் கைகொடுப்பது தாளம் என்னும் கருவியாகும். இக் கருவியோடு பயிற்சி எடுத்துப் பாடுவது மிகவும அவசியம். இராகம், தாளம் முறிந்தால் அது பாடல் அல்ல.

பாடல்களை இசைக்கும் போது ஆதார சுருதி அல்லது ஆதார சுரம் **(Pitch)**, தொனி **(Tone)**, குரல் சத்த அளவு **(Voice control or Volume control)**, அசைவுகள் **(Movements)**, ஏற்ற இறக்கங்களை **(Variations)** அவதானித்து சரியான இடத்தில் ஆரம்பித்து சரியான இடத்தில் நின்று, உயர்த்தி, குறைத்து, முடித்து, கனிவோடு பாடவேண்டும். பாடலை உயர்த்தியோ, குறைத்தோ ஆரம்பித்தால் நிச்சயமாகப் பாடலை பாடி முடிக்க முடியாத நிலை ஏற்படும். இதன் காரணமாகவே பல இசைக் குழுவினர் ஒரு பாடலை ஒரு சுருதியில் ஆரம்பித்து பாடமுடியாமல் சிரமப்பட்டு, வேறோர் சுருதியில் முடிப்பதைப் பார்க்கிறோம். பாடல்களைப் பாடும்போது இழுத்தடிக்காமலும், அவசரப்படாமலும் சரியான லயசுத்தத்தோடு, தாள அளவின் படி பாடி முடித்தால் இசைக்கருவி மீட்டுபவர்களும் சிரமப்படத் தேவையில்லை. இறைமக்களும் திருவழிபாட்டில் பாடிப் பங்கெடுக்க முடியாமல் சலிப்படையத் தேவையில்லை.

### 2.2 இசைஞானம் திரு இசைக்குழுவை ஒழுக்கமுடையதாக்கும்

பல இடங்களில் பங்குத்தந்தையர்களுக்கு முதல் தலையிடியாக அமைவது திரு இசைக் குழுவாகும். தாம் திருவழிபாட்டில் இறைமக்களை வழிநடத்தத் துணை போகும் அங்கத்தவர்கள் என்னும் உன்னத குறிக்கோளை மறந்து பங்குத் தந்தையர்களுக்குக் கீழ்ப்படிய மறுப்பதனால் ''எதையாவது செய்துவிட்டுப் போகட்டும்'' என்னும் நிலை பங்குத்தந்தையர்களுக்கு ஏற்படுவது இயல்பானாலும், பங்குத்தந்தையர்கள் பல இடங்களில் தமது அர்ப்பண உணர்வினால் அவர்களை வழி நடத்த எடுக்கும் முயற்சிகளையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இசைஞானம் பெறுவதனால் ஒருவருக்கு அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி, அறிவு, புத்திக்கூர்மை, கற்பனாசக்தி, ஞாபக சக்தி போன்ற இனிய நல்லொழுக்கப்பண்புகள் உருவாகும் என்பது இசையறிஞர்களின் கருத்தாகும். இனிய உணர்வுதரும் ஓசைத் தொகுதிகள் ஓர் ஒழுங்கு முறையில் வெளிப்படுதலே இசை ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை இசையானது மனித வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்துவிடுகிறது. உயர்ந்த தெய்வீக கருத்துக்கள் பாடல்களாக அமைக்கப்படின் அவை அழியா வாழ்வு பெறுகின்றன. அகம் பாவம் என்னும் துற்குணத்தை ஒழிக்கக்கூடிய சக்தி சங்கீதத்திற்கு உண்டு. சுருதிக் கமைந்து பாடமுயல்வதினாலும், காலலய சுத்தம், தாளம் வழுவாது பாட முயல்வதினாலும் மனிதனுக்கு ஒழுங்குடன் நடக்கும் மனப்பான்மை ஏற்படுகிறது. ஓர் சிறந்த திருஇசைப் பாடல் 6 அம்சங்களைக் கொண்டு விளங்கும். (1) இனிமையான ஸ்வரம், (2) நல்லசுவை (3) அழகான ராகம் (4) மதுரமான இறைவார்த்தை (5) அணிகள் (6) ஒழுங்கு திருஇசைக்குழுவினர் இந்த அம்சங்களை அறிந்து தியாக மனப்பான்மையுடன் இசைஞானம் பெறுவதனால் திருஇசைக்குழு நல்ல கட்டுப்பாட்டுடன், ஆளுமை முதிர்ச்சி பெற்ற குழுவாக இயங்கும். திருவழிபாடும் சிறப்படையும்.

### 1. ஒழுங்கான இசைப்பயிற்சி

திரு இசை வளம் பெற திருஇசைக்குழுவினர் காலக்கிரமமாக இசைப்பயிற்சியில் ஈடுபடவேண்டும். இசைப்பயிற்சிக்காக வாரம்தோறும் திருஇசைக் குழுவினர் ஒன்று கூடும்போது, அந்த வார ஞாயிறு வழிபாட்டு மையக்கருத்தை ஆலய வழிபாட்டுக் குழுவோடு ஏற்கனவே தேர்ந்தெடுத்து அதற்கேற்ற பாடல்களைத் தெரிவுசெய்ய வேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுங்கான பாரபட்சமற்ற...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் அச்சுறுத்தல், காடைத்தனம், சகதி வாரியிறைத்தல், நற்பெயரைக் கெடுத்தல், வேட்பாளர்களின் முகவர்களைப் பலவந்தமாக வெளியேற்றல், ஆயுதம் தாங்கிய குழுக்கள் ஏற்படுத்தும் பயப்பிராந்தி, வாக்கு மோசடி, வாக்குப் பெட்டிகளில் பெருவாரியான வாக்குச் சீட்டுகள் திணிக்கப்படல் போன்ற செயல்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. தீவிரமான அரசியல் மயமாக்குதல் அரசின் இன்றியமையாத அங்கங்களான தேர்தல், காவல்துறை போன்றவற்றைத் தாக்கி பாதிப்புறச் செய்திருக்கிறது.

### பாரபட்சமற்ற தேர்தல்

வாக்களிப்பதில் கடைப்பிடிக்கப்படும் விருப்பத் தெரிவுமுறையானது பலவித குளறுபடிகளையும், கட்சிக்குள்ளும், கட்சிகளுக்கிடையிலும் பிளவுகளையும், மோதல்களையும் ஏற்படுத்தியுள்ளது. வாக்காளர் அட்டைகளை விநியோகியாதிருத்தல், பறித்தல், விலை கொடுத்து வாங்குதல் அல்லது பலவந்தமாக அபகரித்தல் போன்ற மோசடிகளும் ஒழுங்கீனங்களும் அதிகரித்து வந்துள்ளன. வாக்காளரை வாக்களிக்க வராது தடுப்பதும், துரத்தியடிப்பதும் பல இடங்களில் வெளிப்படையாகவும் துணிகரமாகவும் நடந்துள்ளன. எந்த வழியிலும் தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்காக அரசாங்கத்தின் மனித வளம், பொருள் வளங்களை துஷ்பிரயோகம் செய்வதும் இதற்குமுன் என்றுமில்லாத அளவுக்கு வளர்ந்துள்ளது. ஓர் ஒழுங்கான பாரபட்சமற்ற தேர்தல்தான் முறையாக அமைக்கப்பட்ட அரசின் மீது ஆரோக்கியமான நன்மதிப்பை ஏற்படுத்தும். வாக்குச்சீட்டுத்தான் அரசியல் மாற்றத்தைக் கொண்டுவருவதற்குக் கையாளப்பட வேண்டிய கருவி என்பதில் அவர்களது நம்பிக்கையை உறுதிப்படுத்தும்.

### அனைவருக்குமுள்ள கடமை

நாட்டின் குடிமக்கள் என்ற முறையில், எமது வாக்குரிமையைப் பிரயோகித்து நாட்டின் அரசியல் விவகாரத்தில் செயல்முறையான பங்கேற்பது எம் அனைவருக்குமுள்ள ஒரு கடமையாகும். எவ்வாறு வாக்களிப்பது என்று நாம் மக்களுக்குக் கூறவில்லை. ஆனால் நேர்மையும், நாணயமும், நல்ல மனச்சாட்சியுமுள்ள ஆண்களும், பெண்களும் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றோம். வாக்கைப் பிரயோகிக்குமாறு நாம் கூறுவது கட்சி மனப்பான்மையினாலோ பச்சாதாபத்தினாலோ அல்ல, எமது நாட்டின் சனநாயகத்துக்கு மீண்டும் புத்துயிரூட்டவே.

### சமாதான குழுக்கள்

சுதந்திரம் வேண்டுமென்றால், விழிப்பாயிருக்க வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவும், எமது அரசியலை அரித்துக்கொண்டிருக்கும் வன்முறைக் கலாச்சாரத்தினால் எடுபடாமல் இருக்கவும் மக்களுக்கு அறிவுறுத்துமாறு சகல மதத் தலைவர்களையும் பொதுத் தலைவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம். சமாதானக் குழுக்கள் அமைப்பது, தேர்தலுக்கு முன்னும், தேர்தலின் போதும், அதற்குப் பின்னும் ஓர் அமைதிநிலையைப் பேணுவதற்குப் பெரிதும் துணைபுரியும் என்பது நிச்சயம். அரச சார்பற்ற நிறுவனங்கள் தேர்தலைக் கண்காணிப்பதற்கும், சுதந்திரமாக ஒழுங்கான முறையில் தேர்தல் நடைபெறுவதற்கும் சமாதானக் குழுக்கள் உதவி செய்யும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கும்படியும், சனநாயக மதிப்பீடுகளை கடைப்பிடிக்கும்படியும் நல்லெண்ணமுள்ள சகல மனிதர்களையும் கேட்டுக்கொள்கிறோம். இறுதியாக எமது நாட்டின் எதிர்காலத்தை இலங்கை மாதாவின் கையில் ஒப்படைத்து, எமது நாட்டின் சமாதானத்துக்காகவும் சுபீட்சத்துக்காகவும் உழைப்பதுடன் உருக்கமாக செபித்துவருமாறும் சகல கிறிஸ்தவர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

## இறந்தோரின் ஆன்ம இளைப்பாற்றின் விரைவு வாழ்வோரின் விசுவாச வேண்டலிலே தங்கியுள்ளது

இன்றைய உலகில் மரணம் என்பது சர்வ சாதாரண விடயமாகிவிட்டது. இறைவன் வழங்கிய உயிரை மனிதன் பறித்தெடுக்கும் நிலைகள் மலிந்துவிட்டன. எம்மைப் படைத்தவனுக்கே எடுக்கும் அதிகாரம் உண்டு. கத்தோலிக்க முறைமையின்படி ஒருவர் இயற்கை மரணமெய்தும்போது ஒப்புரவு, நோயில் பூசுதல் என்னும் அருட்சாதனங்களைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. தகுதியான இறப்பை சந்திக்கும் பலர் பாவப் பரிகாரமின்றியே தம் வாழ்வை முடித்துக் கொள்கின்றனர்.

இப் பாவமும், மரணமும் ஆதிமனிதன் ஆதாமின் வழியாக மனுக்குலத்துள் நுழைந்தது. புதிய ஆதாம் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் சாவில் நின்று விடுதலையும், விண்ணக வாழ்வும் எமக்கு நற்பரிசாக வழங்கப்பட்டது. ஆனால், மனித பலவீனத்தால் நாம் மீண்டும் மீண்டும் பாவ வாழ்வில் மூழ்கி மரணத்தைத் தழுவுகிறோம். இதனால் எமது ஆன்மா நித்திய மகிமையில் பிரவேசிக்க கால தாமதம் ஏற்படுகிறது.

எம்மோடு வாழ்ந்து இறந்த ஆன்மாக்களுக்காக செபித்து இறைப்பாற்றியை பெற்றுக்கொடுக்க வேண்டிய நற்காரியத்தை ஆற்றுவது எம் ஒவ்வொருவருடைய கடமையும், பொறுப்புமாகும். எனவேதான் இம் மாதத்தை இறந்த அனைத்து ஆன்மாக்களுக்காக அர்ப்பணித்து வேண்டுதல் புரியும் மாதமாக தாய்த் திருச்சபையானவள் எமக்கு அறிவுறுத்தியுள்ளாள்.

''சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்திலும் மறவாதீர்கள்'' என்கிறது இறைவார்த்தை. எம்மைப் பெற்று வளர்த்து தம் தியாகத்தால் எம் வாழ்வை உயர்த்திய பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர் அனைவரும் எம்மால் நினைவுகூரப்பட வேண்டியவர்களே. எமக்கு கல்வியறிவு ஊட்டிய ஆசான்கள், அறிவு ஜீவிகள், தொழில் ஸ்தானங்களில் – பொருளாதார வளர்ச்சியில் எம்மை முன்னேற்றிய அதிகாரிகள், அன்பர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளார்கள். இவர்களின் இளைப்பாற்றிற்காக இறைஞ்சுவது எமது கடமையாகும்.

**எஸ். யேசுதாஸ்**
கொழும்புத்துறை

திருச்சபை வழிநடத்தி வந்த பாப்பிறைகள், ஆயர்கள், எமது ஆன்மீகத்தை நெறிப்படுத்திய, வளப்படுத்திய குருக்கள், துறவிகள் அனைவரையும் நாம் மறந்து விட முடியாது. இவர்கள் இல்லையேல் விசுவாசத்தில் ஆழப் பதிந்த கிறிஸ்தவம், கிறிஸ்தவ மக்கள் ஸ்திரமான ஆன்மீகப் பாதையில் இன்று பயணித்துக் கொண்டிருக்க முடியாது. இவர்களை எமது நாளாந்த செபங்களில் இணைத்துக்கொள்வோம்.

'உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்' என்று கூறி விண்ணக வாழ்வு ஒன்று உண்டு என்பதை இயேசு தெளிவுபடுத்துகிறார். நீதிக்காக, அமைதிக்காக, உரிமைக்காக தம்மை அர்ப்பணித்தோரும், யாரும் நினையாத – கைவிடப்பட்ட ஆன்மாக்களும் நித்திய இளைப்பாற்றியை அடைய குறிப்பாக இம் மாதத்தை பயன்படுத்தி வேண்டுவோம்.

இறந்தோருக்காக செபிப்பதே வாழ்வோராகிய நாம் அவர்களுக்கு புரியும் பேருதவியாக அமையும். எமது வேண்டுதலின்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

---

## இறைதரிசனத்தில் 10ஆம் ஆண்டு நிறைவு

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 – 04 – 1912 | 19 – 11 – 1991 |



### மேரி மார்கிறேற் பஸ்ரியாம்பிள்ளை

பத்தாண்டு நாளின்று உன் நினைவாக
ஆறாகப் பெருகிவரும் கண்ணீரலையாலே
ஆறுதல் தேடியே பரிதவிக்கின்றோமே
ஆறுதல் தரவல்லார் யாரிங்கே எமக்குண்டு

உங்கள் நினைவில் வாடும்

களுபோவிலை
தெஹிவளை

தகவல்:
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்

---

## விண்ணக வாழ்வில் 13ஆண்டுகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 – 02 – 1912 | 05 – 11 – 1988 |



### P.J. அமிர்தநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி)

''கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரை தன் நம்பிக்கையாக கொள்கிறவன், பாக்கியவான்'' ஏரே 14:4

*சீவியத்தில் அவரை அன்பு செய்தோம் ; மரணத்தில் இனிமையுடன் நினைவு கூருகிறோம். அவரின் ஆன்மா இறைவனின் திருமுக - தரிசனத்தில் மனமகிழ்ந்து, எங்களுக்காகப் பரிந்துரைப்பாராக!*

அவரது ஆன்ம சாந்திக்காக யா/அடைக்கல அன்னை ஆல யத்தில், கார்த்திகை மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30மணிக்கும், அருள் ஆச்சிரமத்தில் அன்று காலை 6.30 மணிக்கும் பண்டத்தரிப்பு தியான இல்ல சிற்றாலயத்தில், அன்று காலை 6.30மணிக்கும் பலிப் பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும்

குடும்பத்தினர்.

---

## ஆறாம் ஆண்டு நினைவுகளில்

| அன்னையின் மடியில் | இறைவனின் மடியில் |
|---|---|
| 27 – 09 – 1963 | 06 – 10 – 1995 |



### ஜறின் பெனிற்றா (சாந்தி) அந்தோனிப்பிள்ளை

நீ அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறாய்
நாங்கள் இன்னும் வேதனைத் தீயில் குளிர்காய்ந்து
கொண்டிருக்கின்றோம்

நேற்று நடந்து முடிந்ததுபோல உன்மரணம் இன்னும்
எங்களுக்குள் வந்து வந்து போகின்ற சோகம்
கண்கள் நினைக்கின்றபோதெல்லாம் குளமாகிப்போகும்
இந்த ஊரில் வாழ்ந்திருந்தாய், எங்களுடன் நடமாடித்திரிந்தாய்
மறக்கமுடியுமா அந்த இனிமையான நாட்களை!

இல்லை நீ மரணிக்கவில்லை
மரணித்துவிட்டாய் என்று யார் சொன்னது
மரணம் உன் உடலுக்குத்தான் உன் ஆன்மாவிற்கல்ல,
அது நினைவுகளூடாக எங்களுடன் இன்னும் வாழ்ந்து
கொண்டிருக்கிறதே!

இலையுதிர்க்காலம் வருகின்றபோதெல்லாம் உன்ஞாபகங்கள்
துளிர்விட்டு எங்களுடன் சல்லாபிக்கின்றன
கனவுகளை ஒரு கணம் மீட்டிவிட்டு உன்னைத் தேடுகின்றோம்
நீ அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறாய் நாங்கள்
இந்த குளிர்த்தேசத்தில் உன் நினைவுகளோடு இன்னும்
வேதனைத் தீயில் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றோம்

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனிமார், உடன்பிறவா சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 – 11 – 1910 | 13 – 10 – 2001 |



### சுவாம்பிள்ளை நிக்கொலஸ்

(ஓய்வுபெற்ற புகையிரத தலைமைக் காப்பாளர்)

அன்புடன் எம்மை அணைத்து
பண்புடன் எம்மை வாழவைத்த
எம் அன்புத் தெய்வத்திற்கு
எமது இதயம் நிறைந்த அஞ்சலி

**இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கல்கிசை, புனித அந்தோனியார் ஆலயத்தில் 12.11.2001 காலை 6.45மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.**

இல. 8 ஸ்ரேசன் வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 06

உங்கள் நினைவுடன்
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பலிப் பாடல்கள் பற்றி

## திருவழிபாட்டு ஆணைக்குழு அறிக்கை

அனைத்து மறைமாவட்டங்களிலும் திருவழிபாட்டு நிகழ்வுகளின்போது பாடப்படும் பாடல்களைப் பற்றிய சில ஒழுங்குகளை தேசிய திருவழிபாட்டு ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

பதிலுரைப்பாடல் எல்லாத் திருப்பலிகளிலும் முதலாம் வாசகத்தின் பின் சங்கீதம் பதிலுரைப் பாடலாக பாடப்பட வேண்டும் அல்லது சொல்லப்பட வேண்டும். சங்கீதத்துக்கு பதிலாக தியானப் பாடல் பாடலாகாது.

திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படும் பாடல்கள் ஒலிப்பதிவு நாடாக்களில் அல்லது சிடிக்களில் பதிவுசெய்யப்பட்ட பாடல்களை தேசிய ஆணைக்குழு நன்கு பரிசீலித்த பின்னரே அவற்றை திருவழிபாட்டில் பயன்படுத்த அனுமதி வழங்கப்படும். பாடல்களை அங்கீகரிப்பதற்கு ஆணைக்குழு பின்வரும் பிரமாணங்களைக் கடைப்பிடிக்கும்.

1. பாடல் வேதாகம அல்லது திருவழிபாட்டு கருத்துக்களின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.

2. மொழிநடை இலகுவாகவும் உயர்வாகவும்இருக்க வேண்டும்.

3. இறையியலுக்கு ஏற்காத அல்லது ஐயமான எண்ணக் கருக்கள் இடம்பெற்றிருக்கலாகாது

4. இசையும் இராகங்களும் ஆலய வழிபாட்டுக்குத் தக்கபடி உயர்வாக இருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்படும் பாடல்களை ஆணைக்குழு

1. திருவழிபாட்டில் பயன்படுத்தத் தக்கவை

2. பிற வழிபாடுகளில் பயன்படுத்தத் தக்கவை என வகைப்படுத்தும். *(நன்றி: மெசஞ்சர்–14 ஐப்பசி 2001)*

---


### நற்செய்திப் ...

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நுட்பமாகவும் திறம்படவும் செய்து முடித்தார். 1996ல் அவர் புதிய மறைமாவட்டமான இரத்தினபுரிக்கு ஆயராக நியமனம் பெற்றார்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் சமாதானத்திற்காக முயன்று வருபவர்களுள் ஆயர் ரஞ்சித் தும் ஒருவர்.

பன்மொழிப் புலமையும், பேரறிவும், நிர்வாகத் திறமையும் கொண்ட ஆயர் மல்கம் ரஞ்சித் தமது புதிய பதவியைத் திறம்பட வகிப்பார் என்பதில் ஐயமில்லை.



யாழ்.பேராலயத்தில் ஜோண் லொறட் அடிகளாரின் பிறந்ததின நினைவுநாளும் நூல் நிலைய 5ஆம் ஆண்டு நிறைவுவிழாவும் 20.10.2001 பி.ப. 4.30மணிக்கு ஞானப் பிரகாசியார் மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட றொகான் அடிகள் மங்கள விளக்கேற்றுவதையும் யாழ். மறைக்கோட்ட முதல்வர் ஏ.சி. கிறிஸ்தோபர் அடிகள் அருகில் நிற்பதையும் காணலாம்.

---

### எல்லா.....

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

கிய எமக்கு சமாதானம் வர வேண்டும்.

* இனப்பிரச்சினை பற்றி இரு பிரதான சிங்களக் கட்சிகளின் நிலைப்பாட்டை, கொள்கையை விளக்க வேண்டும்.

* பெரும்பான்மைக் கட்சிகளே தெளிவற்ற நிலையில் இருக்கும்போது எப்படி சமாதானம்? எனத் தெரிவித்தனர்.

இவற்றுக்குப் பதிலளித்த அருள்திரு அலெக்சாண்டர் எல்லா சிங்கள மக்களும் பேரினவாத எண்ணம் கொண்டிருக்கவில்லை. ஒருசிலரே பேரினவாதிகளாக உள்ளனர். அவர்களின் குரலே ஊடகங்களின் ஊடாக வெளிப்படுகிறது. இந் நிலையை முறியடிக்க வேண்டியது எமது கடமையாகும் என்றார்.

அருட்சகோதரி பற்றிமா நாயகி தமதுரையில் நம் ஒவ்வொருவரிடையேயும் உள்ள ஒற்றுமையின்மையும், சமாதானத்துக்கு தடையாக உள்ளது எனக் குறிப்பிட்டார்.

---

### அறிவில்....

*(1ஆம் பக்க தொடர்ச்சி)*

தேவைகளை உணர்த்தும் கியூடெக் நிறுவனத்தினரின் விழிப்பூட்டும் பணிகளில் தீவக மக்கள் பெரிதும் பயனடைகிறார்கள். எமது மக்களின் உண்மை நிலைகள் ஏனைய பகுதி எங்கும் வெளிப்படுவதால் புரிந்துணர்வு கொண்ட சமாதான தூதாக தென்பகுதி சகோதரர்கள் வரவு உறவுப் பாலத்தை ஏற்படுத்த உதவும் என வரவேற்று வாழ்த்தினார்.

---

### இறந்தோரின்...

*(7ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வலிமையால் அவர்களின் பாவத்தின் கனாகனங்கள் குறைக்கப்பட்டு விரைவில் விண்ணக மகிமையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அப்போது "வாருங்கள் என் தந்தையின் ஆசி பெற்றவர்களே உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகும்" *(லூாக் 23:43)* என்று இயேசு வான் வீட்டிற்குள் வரவேற்று நீடிய சம்பாவனையை அளிப்பார். பிற ஆன்மாக்களுக்காக நாம் வேண்டுதல் புரிந்தால் தான் எமது ஆன்மாவின் விடுதலைக்கு பிறிதொருவர் பிரார்த்திப்பர்.

மரணம் வாழ்வின் முடிவல்ல, நித்திய வாழ்வின் ஆரம்பமே. அந்நிய வாழ்வுக்கு உரிமைப் பேறுடையவர்களாவது எமது வாழ்வின் தன்மையிலேயே தங்கியுள்ளது. நொடிப்பொழுதில் சம்பவிக்கும் மரணத்தை நாம் மறப்பதால்தான் வாழ்வில் துன்பங்கள், சோதனைகள், நெருக்கடிகள் தோன்றுகின்றன. பெரியவன் – சிறியவன், எனது எல்லை – எனது கௌரவம் போட்டி, பொறாமைகளை வளர்த்து இடர்படுகிறோம். சகிப்புத்தன்மையுடன் கூடிய அன்பான, பண்பான தியாக வாழ்வை நடைமுறையில் கைக்கொண்டால் எந்நேரமும் நல்மரணத்தை உறுதியுடன் ஏதிர்கொள்ள முடியும். அப்போது அதற்கேற்ற வெகுமதி விண்ணகத்தில் கிடைக்கும். ஏனெனில், விசுவாசிகளின் வாழ்வு மாறுபடுகிற தேயன்றிஅழிக்கப்படுவதில்லை.

எனவே, எமது அன்றாட தனியான, குடும்ப, குழும செப வழிபாடுகளில் இறந்தோருக்காக வேண்டுவோம். விசேடமாக கைவிடப்பட்டோர் அகால மரணங்களில் இறந்தோரை எமது பிரார்த்தனைகளில் சேர்த்துக்கொள்வோம். அனைவரும் ஓர்நாள் இறைவனில் திருமுன் மங்காமகிமையில் சந்திப்போம்.

---

### வேதாகம கற்றல் வகுப்புக்கள்

பொதுநிலையினருக்கான வேதாகம புதிய ஏற்பாட்டு கற்கைநெறிக்கான 2ஆம் கட்ட வகுப்புக்கள் 31.10.2001 புதன்கிழமை (போயா தினம்) காலை 9.15மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆரம்பமாகின்றது.

இக் கற்கைநெறிக்கு புதிதாகச் சேர விரும்புகின்றவர்கள் பங்குத்தந்தையிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு பொதுநிலையினர் ஆணைக் குழு தலைவர் கேட்டுள்ளார்.

---

## டொண் பொஸ்கோ இளைஞர் ஒன்றிய இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

### வன்னி மறைக்கோட்ட கிளி.குமிழமுனை புனித அந்தோனியார் ஆலயத்தில்

வன்னி மறைகோட்டம் கிளி. குமிழமுனை புனித அந்தோனியார் ஆலயத்தைச் சார்ந்த புனித "டொண் பொஸ்கோ" இளைஞர் ஒன்றியத்தன் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் கடந்த 04.08.2001 அன்று குமிழமுனைப் பங்கு புனித டொண் பொஸ்கோ இளைஞர் ஒன்றியத்தினர் கொண்டாடினர். ஆரம்ப நிகழ்வாக காலை 6.30மணிக்கு திருத்தந்தையின் கொடி கிளி.–முல்லை. மறைக் கோட்ட இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருள்திரு ஞானறாச் அவர்களினாலும் ஒன்றியக்கொடி ஒன்றியத் தலைவரினாலும் ஏற்றிவைக்கப்பட்டது. அருள்திரு ஞானறாச் குமிழமுனைப் பங்குத்தந்தை ஞா. பீற்றர் அடிகளார் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். மறையுரையில் அருள்திரு ஞானறாச் அவர்கள் "இளைஞர் ஒன்றிய அங்கத்தவர் ஒவ்வொருவர்க்கிடையிலும் நல்ல ஒன்றிப்பு நிலவ வேண்டும். இளமைப் பருவம் சாதனைகள் படைக்கும் காலம். இளைஞர் தமது இளமைக் காலத்தை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். இயேசுவும் 30வது வயது இளைஞனாய் இருந்த போதே இறைஅரசைப் பற்றிய நற்செய்தி அறிவிப்புப் பணியை ஆற்றினார். சமுதாயத்தின் முதுகெலும்பாகிய இளைஞர்கள் ஒன்றியம் என்னும் அமைப்பினுள் ஒருங்கிணைந்து வழிநடத்தப்படும்போது எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக உருவாவர்" என்று கூறினார். எமது குமிழமுனைப் பங்கைச் சார்ந்த ஆலய நிர்வாகத்தினர், அயல் பங்கு ஒன்றிய பிரதிநிதிகள், புதுவாழ்வுச் சபைச் சகோதரர்கள், அயல் பாடசாலைகள் அதிபர், ஆசிரியர்கள், ஆகியோர் எமது ஆண்டு விழா நிகழ்விற்கு வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

ஒன்றிய அங்கத்தவர்களிடையில் நகைச்சுவையூட்டும் வினோத விளையாட்டுக்கள் இடம்பெற்றன.மாலை 3மணிக்கு இளைஞர் ஒன்றிய குழுக்களிடையிலான வலைப்பந்தாட்டம் இடம்பெற்றது. 6மணிக்கு இளைஞர் ஒன்றியத்தினரின் ஆக்கப்பட படைப்பான கலை நிகழ்வுகள் மேடையேறின. வரவேற்பு நடனம், பங்குத்தந்தையின் உரை, வில்லிசை, தாளலயம், குழுப்பாடல் என்பன இடம்பெற்றன. சிறப்பு நிகழ்வாக சமுதாயத்தில் மிஞ்சி நிற்போர் இளைஞர்களா? முதியோரா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெற்றது. இதனைத் திருவாளர் பண்டிதர் கணநாதன் அவர்கள் நெறிப்படுத்தினார். நள்ளிரவு 12.00மணியுடன் எமது நிகழ்வுகள் யாவும் நிறைவுற்றது.

*தகவல்*

*செல்வி நீ. றோஸ்மலர், புனித டொண் பொஸ்கோ இளைஞர் ஒன்றியம், குமிழமுனைப் பங்கு.*

---

## நம்பிக்கையீனம் பயங்கரவாதத்தை வளர்க்கின்றது

"பயங்கரவாதத்தை வளர்க்கும் நம்பிக்கையீனத்தை எதிர்கொள்ளவும், உலகிற்கு சமாதானத்தைக் கொண்டுவரவும் எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்" என ஐ.நா. சபைக்கு வத்திக்கானின் நிரந்தர பார்வையாளராக இருந்து வரும் பேராயர் ரெனாட்டோ மாட்டினோ செய்தியாளர்களிடம் கூறினார்.

"பயங்கரவாதிகள் நம்பிக்கையிழந்ததால் மனக் கசப்புற்றிருப்பவர்கள். தாம் இழப்பதற்கு ஒன்றுமில்லை எனக் கருதுபவர்கள். எதிர்காலத்தைப் பற்றி சிந்தியாதவர்கள். ஆகவே கொல்லவும், கொல்லப்படவும் தயார்ராயிருக்கிறார்கள்.

"பயங்கரவாதத்தின் அடியிலுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும்" என்று கூறிய இப் பேராயர் செப்டெம்பர் 11ஆம் திகதி ஐ.நா. சபைக்குப் போகப் புறப்பட்டபோது உலக வர்த்தமையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் அக் கோபுரங்கள் தகர்ந்து விழுந்ததையும் காணநேர்ந்தது.

"இந் நிகழ்ச்சி சமாதானத்தைத் தேடுவது எவ்வளவு காத்திரமானது என்பதைக் காட்டுகிறது. சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு வழிவகைகள் உள்ள ஒவ்வொரு நாடும் அதற்காக முயல வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

---

## நற்செய்தி பணியில் கிறிஸ்துவின் சாட்சிகளாகின்றோம்

ஒரு கிறிஸ்தவனது மறையறிவானது ஆணித்தரமான முறையில் அவனிடையே கற்பிக்கப்படும் போதுதான், அவன் முழுமையான ஆன்மீகத்தில் வளரமுடியும். இன்றைய வளரும் சிறார்களிடையே இம்மறைவாழ்வுக் கல்வி குறைவடைந்து செல்வதினாலேயே சமூகத்தில் பல்வேறு ஒழுக்கநெறி தவறிய வாழ்வும், ஆன்மீக வலுவற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனவே வளரும் இளம் சிறார்களிடையே மறைவாழ்வுக் கல்வி ஆழமான முறையில் கற்பிக்கப்பட வேண்டுமாயின், ஒவ்வொரு ஆலயங்களிலும் மறைக்கல்வி வகுப்புக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். போதக முறையிலான கல்வியாக மட்டும் இதனை வழங்காது, கற்கும் மாணவர்களின் ஆர்வத்தையும், ஆற்றலையும் வெளிக்கொணரும் வாழ்வின் கல்வியாக பல்வேறு கலையாற்றல் வடிவத்தோடும் சமூக சூழ்நிலைகளோடும் தற்கால தொழில்நுட்ப சாதனங்கள் ஊடாகவும் வளர்க்கப்பட வேண்டும். அப்போது தான் மாணவர்கள்மட்டில் மிகுந்த பலனை எதிர்பார்க்க கூடியதாக விளங்கும். இம் மறையறிவுக் கல்வியைப் போதிப்பதனாலும், அதனைக் கற்றுக்கொள்வதினாலும் நாம் நற்செய்திப் பணியில் பங்குகொண்டு கிறிஸ்துவின் சாட்சிகளாகின்றோம். ஆகவே நாம் ஒவ்வொருவரும் எமது மறைவாழ்வுக் கல்வியில் சிறந்த ஆர்வமுடன் விளங்கி, எம் ஆன்மீகத்தை வளப்படுத்துவதுடன், விசுவாச உறுதிப்பாடு மிக்க சமூகத்தையும் கட்டியெழுப்ப வேண்டும்.

இவ்வாறு 21.10.2001 அன்று இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற மறைக்கல்வி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய இளவாலை பங்குத்தந்தை பி.எவ். பொணிவேஸ் அடிகள் இதனைத் தெரிவித்தார். அன்றைய நிகழ்வில் 'மறைஒளி' எனும் கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடப்பட்டதுடன், மாணவர்களின் மறையறிவு தொடர்பான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் ஓவ்செற் முறையில் 2001ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. P197